
வெளியீடு எண் : 47

# திருவிடைமருதூர்

## தலவரலாறு



திருக்கோயில் தோற்றம்

அருள்மிகு மகாலிங்கப் பெருமான் திருக்கோயில்

திருவிடைமருதூர்

1992

வெளியீடு எண் : 47

உ
சிவமயம்

# திருவிடைமருதூர்
## தலவரலாறு

இது
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது

திருவிடைமருதூர்
அருள்மிகு மகாலிங்கப்பெருமான் திருக்கோயில்
1992

நான்காம் பதிப்பு:

விலை ரூபாய் ஐந்து.



ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்

— திருவாவடுதுறை —

உ

சிவமயம்

# முகவுரை

"ஏற தேறும் இடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்கும் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்க்கு
ஊறி ஊறி உருகும்என் உள்ளமே."

இன்பத் தமிழகத்தைத் தெய்வமணங் கமழும் நாடாகச் செய்வன திருக்கோயில்கள். மக்கள் வாழ்வு இன்பவாழ்வாக, அமைதி வாழ்வாக அமைவது திருக்கோயில்களினாலேயேயாம், பல்வேறு வாழ்க்கையினராகப்பிரிந்து நிற்கும் மக்களையெல்லாம் ஒன்றுபடுத்துவன கோயில்கள். அருங்கலைகளையும், நாட்டு வரலாற்றுச் செய்திகளையும் பேணிக்காக்கும் கலைக் களஞ்சியங்களாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன.

திருக்கோயில் வழிபாட்டால் ஆகும் உயரிய பயன்களை அறிந்து, அன்பர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகள் அமைந்தனவும், நாயன்மார்களால் பாடல் பெற்றனவுமாகிய தலங்களுக்குச் சென்று முறையாக வழிபடுதலைத் தம் சிறந்த கடமையாகக் கொண்டுள்ளனர். தல வழிபாட்டிற்குச் செல்லும் அன்பர்கள் அவ்வத்தலங்களின் பெருமைகளை ஓரளவேனும் தெரிந்திருத்தல் தக்கது. இம்முறையில், அளப்பரிய பெருமைகளை யுடையதாகிய திருஇடைமருதின்

சிறப்புகளைச் சுருக்கமாகவேனும் அறிந்து அன்பர்கள் வழிபட இச்சிறு நூல் வெளியிடப்பெறுகின்றது.

காவிரிக்குத் தென்கரையில் முப்பதாவது தலமாக விளங்குவது திருவிடைமருதூர். சமயாசாரியர்கள் நால்வர் பாடல்களும் பெற்ற பெருமையுடையது. இடைமருதீசன் பேரருள் பெற்ற பட்டினத்துப்பிள்ளையார் தாம், அருளிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் இத்தலத்தின் பெருஞ் சிறப்புகளையும் பூசித்து வழிபட்டோர் பெருமைகளையும் போற்றியருளியுள்ளார். வரகுணதேவர்க்குக் கொலைப்பழி நீங்கிய தலம். அருட்பெருமை மிகுந்த இத்திருக்கோயிலின் பெரிய பிரகாரத்தை (அசுவமேதப்பிரகாரம்) முறையாக வலம் வந்து பெருமானை வழிபடுவோர் சித்தசுவாதீனமின்மை, பைத்தியம் முதலிய பெருநோய்களினின்றும், பாவங்களினின்றும் நீங்கி வேண்டும் நலன்களெல்லாம் எய்தி இன்புறுதல் இன்றும் கண்கூடு.

இத்தலத்தைப் பற்றியனவாக நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. அவை, சோழ மன்னர்களாலும், பாண்டிய மன்னர்களாலும், மன்னர்குல மகளிராலும் அமைந்தவை. இக்கல்வெட்டுக்களால் தலத்தைப்பற்றிய சிறந்த நிகழ்ச்சிகள் பலவும் வரலாற்று உண்மைகளும் அறியலாகும்.

இத்தகு பெருமைகள் அமைந்த இத்திருக்கோயில், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளி, சிவத்தல குருத்தல பரிபாலனமும்

சித்தாந்த சைவபரிபாலனமும் செந்தமிழ்ப் பரிபாலனமும் செய்தருளும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள் அருள்திருவாகத்தில் சிறந்து திகழ்கின்றது.

சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டருளியபடி, முன்னர் வெளியிடப் பெற்ற இத்தல வரலாற்றுச் சுருக்க நூல் சில திருத்தங்கள் பெற்றும் தலப்பதிகங்கள், திருப்புகழ், ஏகநாயக ஊசல் ஏகநாயகர் தாலாட்டு என்பன சேர்க்கப்பெற்றும் வெளியிடப்பெறுகின்றது. சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானமவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் தலத்திருமுறைகள், தலப்பிரபந்தங்கள் கல்வெட்டுக்கள் முதலியவற்றின் விளக்கங்களுடன் கூடிய இத்தல நூல் ஒன்று விரைவில் வெளிவரவுள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளியேனையும் இவ்வண்ணம் பணிகொண்டருளும் சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் பொற்பாத கமலங்களை மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

ஸ்ரீ மெய்கண்டதேவன் திருமரபு நீடு தழைக

| | |
|---|---|
| சரசுவதிமகால் நூல்நிலையம் | இங்ஙனம் |
| திருவாவடுதுறை ஆதீனம் | பா. மகாலிங்கம் |
| திருவாவடுதுறை | ஆதீன நூலகர் |

உ

சிவமயம்

# குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

# பொருளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| முகவுரை. | | |
| தலவரலாறு | ... | 1 – 32 |
| திருவிடைமருதூர்த் தேவாரம் | ... | 33 |
| ,, திருவாசகப் பாடல்கள் | ... | 58 |
| ,, திருவிசைப்பா | ... | 5௯ |
| திருப்பல்லாண்டு, திருமந்திரம் | ... | 62 |
| திருவிடைமருதூர் மும்மணிக்கோவை | ... | 63 |
| பெரிய புராணப் பாடல்கள் | ... | 67 |
| திருப்புகழ் | ... | 68 |
| க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ் | ... | 74 |
| ஸ்ரீ ஏகநாயகருசல் | ... | 75 |
| ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு | ... | 78 |
| மருதவாணர் தோத்திரப் பதிகம் | ... | 81 |
| மருதவனப் புராண தோத்திரப் பாடல்கள் | ... | 85 |
| கல்வெட்டுகள் | ... | 87 |

## பிரசுரிக்கப்பட்ட புத்தகத்தின் விவரமான அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் : | திருவிடைமருதூர்–தலவரலாறு |
| மொழி ; | தமிழ் |
| ஆசிரியர் : | புலவர் பா. மகாலிங்கம் |
| பதிவு உரிமையாளர் ; | அருள்மிகு மகாலிங்கப் பெருமான் திருக்கோயில் திருவிடைமருதூர், |
| பதிப்பு ; | நான்காம் பதிப்பு |
| பயன்படுத்திய தாள் : | கிரௌன் 10·9, கி. கி. |
| பக்க எண் : | 80 + 8 |
| எண்ணிக்கை ; | 2000 பிரதிகள் |
| விலை ; | ரூபா ஐந்து |
| அச்சு எழுத்து எண் : | 11 + 10 Point |
| அச்சிட்டவர் ; | நமசிவாயமூர்த்தி அச்சகம் திருவாவடுதுறை |
| கட்டடம் : | ராப்பரும், பகுதி தையலும் |
| நூலின் வகை ; | தலவரலாறும், தலப் பதிகங்களும் |



அருள்மிகு மகாலிங்கப் பெருமான்



அருள்தரு பெருநலமாமுலை அம்மை



அருள்தரு மூகாம்பிகை

உ

சிவமயம்

# திருவிடைமருதூர்த் தலவரலாறு

திருவருட்பொலிவும் கலையழகும் அமைந்த திருக்கோயில்கள் தமிழகம் எங்கணும் நிறைந்து மக்கள் வாழ்வினை மேன்மைபெறச் செய்கின்றன. காவிரியாறு புனல் மல்கி வளம் பெருக்கும் சோழ நாட்டுத் தஞ்சை மாவட்டத்தில் காவிரித் தென்கரைத் தலங்களுள் திருவிடைமருதூர் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகளால் பெருமையுற்று விளங்குவது, மயிலாடுதுறை கும்பகோணம் புகைவண்டிப் பாதையில் திருவிடைமருதூர்ப் புகைவண்டி நிலயத்திற்கு வடக்கிலும் கற்சாலைக்குத் தெற்கிலும் இத்தலத் திருக்கோயில் அமைந்துள்ளது.

## தலப்பெயர் :

சண்பகாரண்யம், சத்திபுரம், வில்வவனம், தபோவனம், ஜோதிபுரம், சர்வதீர்த்தபுரம், செல்வ விருத்திபுரம், தருமவிருத்திபுரம், முத்திபுரம், இடைமருது, வீரசோழபுரம், பூலோகம் என 12 பெயர்கள் இத்தலத்திற்கு இலக்கியங்களிலும் புராணங்களிலும் வழங்கப்படுகின்றன. வடக்கே வடுகநாட்டிலுள்ள மல்லிகார்ச்சுனத்திற்கும் (ஸ்ரீசைலம்) தெற்கே

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருப்புடை மருதூர்க்கும் (புடார்ச்சுனம்) இடையில் இத்தலம் இருப்பதால் இதற்கு இடைமருது (மத்தியார்ச்சுனம்) எனும் பெயர் அமைந்தது. அர்ச்சுனம் எனும் வட சொல்லுக்கு மருதமரம் என்று பொருள். இம்மூன்று சிவத்தலங்களிலும் தலவிருட்சம் மருதமரமே.

## கோயிலின் அமைப்பு :

இத்திருக்கோயில் மிக்க அழகும் அருட்பொலிவும் கொண்டு கிழக்குமுகமாய் விளங்குகிறது. கீழைக் கோபுரத்துத் திருமதிலையொட்டி ஒரு ஏக்கர் அளவில் காருணியாமிருத தீர்த்தம் நாற்புறமும் சுற்றுச்சுவரையும் மூன்று பிரதான வாயில்களையும் பெற்று விளங்குகிறது.

கோயிலைச் சூழ நான்கு பக்கமும் பெரிய திருமதிலோடு கூடிய நான்கு இராசகோபுரங்கள் உள்ளன. அவைகளுள் மேற்கேயுள்ள இராசகோபுரம் மிகப் பெரியதாகும். இவை தவிர, கோயிலின் உட்பகுதியில் மூன்று கோபுரங்கள் உள்ளன. இவைகளோடு இக் கோயிலில் ஏழு கோபுரங்கள் காட்சி தருகின்றன.

இத்திருக்கோயிலில் மூன்று பெரிய பிரகாரங்கள் உள்ளன. அவை அசுவமேதப் பிரதட்சிணப் பிரகாரம், கொடுமுடிப் பிரகாரம் (சித்திரப்பிரகாரம்), பிரணவப் பிரகாரம் என்பன இவைகளையன்றிச் சுவாமி, அம்பாள் கோயில்களைச் சூழ உட்பிரகாரங்களும் உள்ளன. கோயிலைச்சூழ்ந்து நான்குபுறமும் மடவளாகங்களும், தேரோடும் நான்கு பெரிய திருவீதிகளும் அமைந்து விளங்குகின்றன.

தேரோடும் நான்கு வீதிகளின் கோடிகளிலும் விநாயகர் கோயில்கள் உள்ளன. கீழவீதியின் தென் கீழ்பால் விசுவநாதர் கோயிலும், தெற்கு வீதியில் ஆன்மநாதர் ஆலயமும், கோயிலின் மேலவீதியில் ரிஷிபுரீசுவரர் கோயிலும், வடபால் சொக்கநாதர் ஆலயமும் உள்ளன. நாற் புறமும் இந்நான்கு சிவாலயங்கள் விளங்க நடுவில் மகாலிங்கப்பெருமான் திருக்கோயில் அமைந்துள்ளதால் இது பஞ்சலிங்கத் தலமென வழங்கப்படுகிறது. வடக்குக் கோபுரத்தைச்சார்ந்து அகோர வீரபத்திரர் கோயிலும், மேற்குக் கோபுர நுழைவாயிலில் குமரப்பெருமான் கோயிலும் உள்ளன.

கீழைக் கோபுர வாயிலைக் கடந்ததும் காட்சி தருவது படித்துறைவிநாயகர் கோயில். இவ்விநாயகர் காவிரியின் படித்துறையில் விளங்கியவர் என்பதை இத்தலத்து வீரசோழன் காலத்துக் கல்வெட்டால் அறியலாம். கோயிலின் உட்பிரகாரத்தில் சுவாமி சந்நிதிக்குத் தென்பால் ஆண்ட விநாயகர் கோயில் அழகாக அமைந்துள்ளது. பிரணவப் பிரகாரத்தின் வட பகுதியில் தல விருட்சமாகிய மருதமரம் உள்ளது. அதன் எதிரே திகழ்வது வேம்படிக்குமரக் கடவுள் கோயில். இரண்டாவது பிரகாரமாகிய கொடுமுடிப் பிரகாரத்தின் வடபால் மேற்கு சந்நிதியாக சொக்கநாதர் கோயில் உள்ளது. மழையில்லாக் காலங்களில் இப்பெருமானுக்குச் சிறப்பாகப் பூசை செய்து மேகராகக் குறிஞ்சிப் பண்ணமைந்த திருமுறைப் பதிகங்களைப் பாராயணஞ் செய்ய மழை பொழிவது இன்றும் நடைமுறையில் உளது. பெரிய

பிரகாரத்தின் தெற்குக் கோபுரத்திற்கு மேல்பாலும், அம்பாள் சந்நிதிக்குத் தென்பாலும் அருள்மிகு மூகாம்பிகை திருக்கோயில் உள்ளது. இக்கோயிலின் கருப்பக்கிரகம் வடஇந்தியக் கோயிற் கோபுர அமைப்பில் அமைந்து விளங்குகிறது. இக்கோயிலினுள் இருந்த பழமையான மகாமேருச் சக்கரம் "பின்னம்" அடைந்தமையால் திருவாவடுதுறை ஆதீனத்து 23-வது குரு மகாசந்நிதானம் சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள் நூதனமாக மகாமேரு அம்பாளை முறைப்படி நிர்மாணிக்கச் செய்தும் இக்கோயிலுக்கு மிகத் தேவையான திருப்பணிகளை செய்வித்தும் 26—1—1992 அன்று ஸ்ரீ சக்கரமகாமேரு அம்பாள் பிரதிட்டையுடன் ஸ்ரீ மூகாம்பிகை கோயில் மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்துவித்தார்கள்.

*அணிமருவும் இடைமருதீ சருக்கு நந்தி*
*ஆவடுதண் டுறை, சேரமாக் கந்தரரூர்,*
*திணிபுகழா லங்குடியில் குருமூர்த்தி, யானைத்*
*திருமுகத்தோன் வலஞ்சுழி,ஏ ரகத்திற்செவ் [வேள்,*
*கணிதரும்ஆப் பாடியிற்சண் டீசன், தில்லைக்*
*கதிர்ப்பொதுவில் நடக்கடவுள், வடுகன்காழி,*
*பணைமருவு மாந்துறையின் இரவி யாகும்*
*பரமனெழிற் பதமலருக் கன்புமிக்கீர்.*

## மூல இலிங்கத் தலம் :

சிவாலயங்களிலே மூலமூர்த்தியும் பரிவாரக் கடவுளர் சந்நிதிகளும் அமைய, சிவாகம நூல்கள்

வகுத்துரைக்கும் திக்குரியமனப்படி, அவ்வத்திசைகளில் அவ்வக் கடவுளர் சிறப்புடைய தலங்கள் அமைய இத்திருவிடைமருதூர் அவற்றின் நடுவண் மூல இலிங்க மூர்த்தித் தலமாக விளங்குகிறது. திருவலஞ்சுழி, திருஏரகம் (சுவாமிமலை), திருஆப்பாடி, திருமாந்துறை (சூரியனார்கோயில்), சிதம்பரம், சீகாழி, திருவாவடுதுறை, திருவாரூர், ஆலங்குடி எனுந் தலங்கள் முறையே விநாயகர், முருகப்பிரான், சண்டேசுவரர், சூரியன், நடராசர், வடுகமூர்த்தி நந்திதேவர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி தலங்களாக அமைய மூலஇலிங்கத் தலமாக, இத்தலம் விளங்கி மகாலிங்கப் பெருமான் திருக்கோயில் கொண்டு அருள்பாலிக்கின்றார்,

## மண்டபங்கள் :

திருக்கலியாணமண்டபம், ரெட்டியார்மண்டபம், திருவாதிரை மண்டபம், ஊஞ்சல் மண்டபம் முதலிய பல மண்டபங்கள் கோயிலுள் அமைந்து அழகூட்டுகின்றன.

## தீர்த்தங்கள் :

இத்தலத்தில் காருணியாமிருத தீர்த்தம் முதல் கலியாணதீர்த்தம் ஈறாக 32 தீர்த்தங்கள் உள்ளன கலியாணதீர்த்தம் என்பது காவிரியின் தென்புறத்தில் இருக்கும் பூசத்துறையாகும். இத்தீர்த்தத்தில் தைப்பூசத்தன்று நீராடுவோர் சகல பாவங்களினின்றும் விடுபட்டு நலன்களெல்லாம் பெற்று இன்பமடைவர். தைப்பூசப் புனித நீராடலின் சிறப்பு திருமுறைகளில் பெரிதும் புகழ்ந்து போற்றப் பட்டுள்ளது.

## தலத்தைப்பற்றிய நூல்கள் :

இத்தலப்பெருமைகளை, கந்தபுராணம், இலிங்க புராணம், பிரமகைவர்த்தம். சிவரகசியம் என்ற நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. சமயாசாரியர்கள். நால்வரும் அருளிய தேவார திருவாசகத் திருமுறை களிலும் பட்டினத்தடிகள் அருளிய திருவிடை மருதூர் மும்மணிக் கோவையிலும் அருணகிரிநாதர் திருப்புகழிலும் இத்தலத்தின் சிறப்புகளும் மகாலிங்கப் பெருமான் அருட்பெருமைகளும் விரிவாகப் போற்றப் பெற்றுள்ளன. மேலும் இத்தல விஷயமாகப் பதிற்றுப்பத்தந்தாதி. உலா, கலம்பகம். நொண்டி நாடகம் முதலிய சிற்றிலக்கிய நூல்களும் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய மருதவனப் புராணமும் உள்ளன.

## திருவிழாக்கள் :

இத்திருக்கோயிலில் நடைபெறும் திருவிழாக் களில் தைப்பூசப்பெருவிழா, வைகாசி வசந்த விழாவாகிய திருக்கலியாணத்திருவிழா, அறுபத்து மூவர் விழா. நவராத்திரி விழா. திருவாதிரை விழா, முதலியன சிறப்புடையனவாகும். திருஞான சம்பந்தரும். திருநாவுக்கரசரும் தைப்பூச விழாவின் மேன்மையினை இத்தலத் திருப்பதிகங்களில் குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளனர்.

## வழிபட்டோர் :

இத்தலத்தில் உரோமசமுனிவர் முதலிய முனிவர் களும் பட்டினத்தடிகளும் பத்திரகிரியாரும் பெரு

மானை வழிபட்டுப் பெரும்பேறு பெற்றனர். வரகுண பாண்டிய மன்னன் இத்தலத்தை அடைந்து தன்னைப் பற்றிய பிரமகத்திதோஷம் நீங்கப்பெற்றான். சிவபிரானிடத்துப் பேரன்பினராய் திருக்கோயிலில் பல திருப்பணிகளைச் செய்துள்ளான்.

## பட்டினத்தடிகள் :

இறைவன் குபேரனுடன் பல தலங்கட்குஞ் சென்று காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தார். குபேரன் அத்தலத்தில் தங்கி வாழ விரும்பியதை அறிந்து, இறைவன் அவனை அங்குப் பிறந்துவாழ அருள்செய்தார். குபேரன், இறைவன் அருளியதற்கு மகிழ்ந்தானாயினும், மண்ணுலக வாழ்வில் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என வேண்டிக்கொண்டான், சிவபிரானும் அவ்வாறே அருள் புரிந்து திருக்கயிலை அடைந்தார். குபேரன் அப்பட்டினத்தில் சிவநேசருக்குப் புதல்வராகத் தோன்றித் திருவெண் காடர் என்ற பெயருடன் வளரலானார்.

திருவெண்காடர் உரிய பருவமடைந்ததும் சிவகலை என்னும் நங்கையை மணந்து அவருடன் இல்லற வாழ்க்கையை நல்லற வாழ்வினதாக நடத்தினார். அவர்களது வாழ்க்கையில் மகப்பேறு இல்லாதது பெருங்குறையாக இருந்தது. இருவரும் இறைவர்பால் வேண்டிக் குறையிரக்கலானார்கள்.

இவர்களது குறையினைக்களைய, பேணும் தொண்டர் இச்சை மிக அறிபவராகிய இடைமருதீசர் ஒருநாள் வில்வமரத்தடியில் குழந்தை வடிவாய் எழுந்

தருளினர். அக்கோயில் சிவாசாரியாராகிய சிவசருமர் அக்குழந்தையை எடுத்து மனைவியிடம் கொடுத்தார். இருவரும், தங்கள் வறுமையை இந்தக் குழந்தை மூலம் போக்கிக் கொள்ள மருதீசர் ஆணைப்படி குழந்தையைக் காவிரிபூம்பட்டினம் எடுத்துச் சென்றனர். திருவெண்காடர் அக்குழந்தையின் எடை அளவு பொன் கொடுத்து அக்குழந்தையைப் பெற்று மருதவாணர் என்று பெயர் சூட்டி அன்புடன் வளர்க்கலானர். மருதவாணரும் அறிவு ஒழுக்கங்களில் சிறந்து இளம்பிராயத்தை யடைந்தார். தந்தை திருவெண்காடர் விருப்பத்தின்படி ஒரு சமயம் கடல் கடந்த நாடுகளிற் சென்று வாணிபம் செய்து திரும்பினர்.

கடல் வாணிபம் செய்து திரும்பிய மருதவாணர், தந்தை திருவெண்காடரிடம் சேர்ப்பிக்கும்படி சிறு பெட்டி ஒன்றைத் தாயாரிடம் கொடுத்து மறைந்தார். தன் மனையாளிடம் பேராவலுடன் பெட்டியினைப் பெற்ற வெண்காடர், அதனைத் திறந்து பார்க்க, அதில் " காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே " என்றெழுதப்பட்ட ஓலையும் காதில்லா ஊசியுமிருக்கக் கண்டார். உண்மை தெளிந்தார். பற்றலாவதோர் பற்றினைப்பற்ற துறவு பூண்டார். பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதூரையடைந்து கீழைக்கோபுர வாயிலில் தங்கிச் சிவயோகத்திருந்தார். பின் வடதிசை நோக்கிச் சென்றார். பத்திரகிரியார் என்ற அரசர் இவருக்குச் சீடரானர். அவருடன் மீண்டும் திருவிடைமருதூரை அடைந்தார். பத்திரகிரியார் பட்டினத்தடிகளால் சிவஞானம் கைவரப் பெற்றுத்

திருவருட் சோதியில் கலந்தார். அடிகள் தில்லை, காஞ்சி முதலிய தலங்களை வழிபட்டுத் திருவொற்றியூரை அடைந்து அத்தலத்தில் சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

**பத்திரகிரியார் :**

பத்திரகிரியார் உஜ்ஜயினி நாட்டு அரசர். வடதிசை நோக்கிச் சென்ற பட்டினத்தடிகள் உஜ்ஜயினி நாட்டில் உள்ள காட்டில் பிள்ளையார் கோயிலொன்றில் நிட்டை கூடி இருந்தார். அச்சமயம் அரண்மனையில் கொள்ளையிடச் சென்ற கள்வர்கள் "பெருமானே! எமக்குப் பெரும் பொருள் கிடைக்குமாயின் முத்தாரம் தேவரீர்க்குச் சாத்துகிறோம்" என்று வேண்டிக்கொண்டு சென்றார்கள். கள்வர்கட்குப் பெரும்பொருள் கிடைத்தது. அவர்கள் திரும்புங்கால், வேண்டிக்கொண்டபடி முத்துமாலையை விநாயகரை நோக்கி எறிந்தார்கள். அம்மாலை அங்கு சிவயோகத்திலிருந்த பட்டினத்தார் கழுத்தில் விழுந்தது.

மறுநாள் பட்டினத்தடிகள் கழுத்தில் முத்துமாலையைக்கண்ட காவலர்கள் அவரே களவாடியவர் என்று பிடித்துச் சென்று அரசரிடம் விட்டார்கள், அரசர் அவரைக் கழுவில் ஏற்றுமாறு உத்தரவிட்டுத் தாமும் உடன் சென்றார். அடிகள் இறைவனைத் துதித்துக் கழுமரத்தை நோக்கவே கழுமரம் தீப்பற்றி எரிந்தது. அரசர் அதனைக் கண்டு அஞ்சினார். அடிகளுக்கு அடிமையானார். துறவு பூண்டு அடிகளைப் பின் தொடர்ந்து திருவிடைமருதூரை அடைந்து சிவயோகத்தமர்ந்தார்.

ஒருநாள், இறைவன் அடியார் உருவில் பட்டினத்தடிகளை அடைந்து பிச்சைகேட்டார். அடிகள் "மேலைக் கோபுரத்தில் ஒரு சமுசாரி உள்ளான்; அவன்பால் செல்க" என்றார். இறைவனும் அவர்பாற் சென்று அடிகள் சொல்லி யதைத் தெரிவித்துப் பிச்சை கேட்டார். பத்திரகிரியார் 'இவ்வோடும் நாயுமல்லவோ, என்னைச் சமுசாரி ஆக்கின' என்று கூறி ஓட்டை நாயின் மீது எறிந்தார். ஓடு உடைந்தது; நாயும் உயிர் விட்டது. அவ்வுயிர் காசி அரசன் மகளாய்ப் பிறந்தது வளர்ந்தது. சிலகாலம் கழிந்து அவள் பத்திரகிரியாரை அடைந்தாள். பத்திரகிரியார் அப்பெண்ணுடன் தன் குருவையடைந்து பணிந்தார். மூவரும் கோயிலினுட் செல்ல, தோன்றிய சோதியைக் கண்டு பணிந்தார்கள். பத்திரகிரியாரும் அந்தப் பெண்ணும் அச்சோதியுட் கலந்தார்கள். பட்டினத்தார் இறை யருளை எண்ணி வியக்கலானார்.

### தலவரலாற்றுப் படங்கள் :

இத்திருக்கோயிலின் சுவாமி சந்நிதியில் சுதை வடிவில் விளங்கும் பெரிய நந்திக்கு மேற்கே உள்ள இருபக்கச் சுவர்களிலும் இத்தல சம்பந்தமான புராண வரலாறுகள் வண்ணப்படங்களாக எழுதப் பட்டுள்ளன.

## புராண வரலாறு

### உமை தவம் செய்தல் :

அகத்தியர், முனிவர்களோடு இடைமருதை யடைந்தார். உமாதேவியை நினைந்து சண்பகச்

சோலையில் தவஞ்செய்யத் தொடங்கினர். இறைவனது ஆணையின வண்ணம் உமையம்மை முனிவர்கட்குக் காட்சி கொடுத்தருளினர். முனிவர்கள் முறைப்படி இறைவியை வழிபட்டு. இறைவரும் காட்சி வழங்க அருள் செய்ய வேண்டுமென்று குறையிரந்தார்கள். உமையம்மை இறைவரை எண்ணிச் சிவோகம் பாவனையில் தவமிருந்தார். இறைவன் அம்மையின் தவத்திற்கு இரங்கி அவர் இருதய கமலத்தும் முனிவர் கட்கு வெளிப்படையாகவும் காட்சி வழங்கி ஏகநாயகராகத் திகழலானர்.

## தம்மைத்தாம் அருச்சித்தல் :

இறைவர் உமைக்கும் முனிவர்க்கும் காட்சி வழங்கி சோதி இலிங்கத்தைப் பூசிக்கலானர். தேவர்கள் எல்லாம் பூசைப் பொருள்களை ஏந்தி நின்றார்கள். இறைவர் முறைப்படி பூசைசெய்து தேவர்கட்கு வரம் நல்கினர். உமை இறைவரைப் பார்த்துப் "பெருமானே! பிரமன் முதலிய தேவர்கள் உம்மைப் பூசிப்பதன்றே முறை; அவ்வாறிருக்க இந்த மூர்த்தியிடத்து எவரைப் பூசித்தீர்" என்று வினவினர். அதனைக் கேட்ட இறைவன் "உமையே! பூசித்தோனும் பூசனையை ஏற்றுக்கொண்ட பரம் பொருளும் நாமே, நம்மை நாமே பூசிப்பதற்குக் காரணம், இம்முனிவர்கள் நம்மைப் பூசித்தலை மறந்தனர். அவர்கள் அதனை அறிந்து கோடற் பொருட்டே யாம் பூசித்தோம்" என்றனர். அன்று தொடங்கி முனிவர் முதலாயினோர் இப்பெருமானைக் காமிகாகம விதிப்படி பூசைசெய்து பெரும் பேறு பெறுவாராயினர். இத்தலத்தில் தைப்பூச ஐந்தாந்

திருவிழாவன்று தம்மைத்தாம் அருச்சித்தல் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

## உரோமசர் அருள்பெறல் :

உரோமச முனிவர் வீட்டின்பத்தை அடைய எண்ணித் தவத்தோர் பலருடன் சிவத்தல யாத்திரை சென்றார். பல தீர்த்தங்களில் நீராடிக் காவிரியில் முழுகினார். இடைமருதூரை அணுகினார். அவ்வமயம் இடைமருதூரில் உள்ள கனக தீர்த்தத்திலே காகம் ஒன்று முழுகி எழுவதைக் கண்டார், எழுந்த காகம் மருத மரத்தில் உட்கார்ந்தது ; தன் இயல்பான கரிய வடிவம் நீங்கிப் பொன்வடிவம் பெற்றது. ஆச்சரிய மடைந்தது. இறைவன் அருளால் அவ்விடத்துப் பொன் விமானம் தோன்றியது. அதில் காகம் அமர்ந்து கயிலையை அடைந்தது.

இக்காட்சியை உரோமசமுனிவர் கண்டார். திருக்கோயிலை அடைந்தார். பௌத்தம் மேலோங்கிச் சைவம் குன்றிய நிலையில் மருதீசரைப் பூசித்த விநாயகப் பெருமானை வழிபட்டார். இவ்விநாயகர் உலகையும் சைவத்தையும் ஆண்டு காத்துவரும் தன்மையால் ஆண்டவிநாயகர் என விளங்குகிறார். உரோமசர் மருதவனத்தையே கயிலாயமாக எண்ணினார். கோயிலின் வடபால் ஒரு பர்ணசாலை ஏற்படுத்தினார். முப்போதும் காவிரியில்நீராடி சிவாகம விதிவழுவாமல் சிறப்பாகப் பூசைசெய்து வருவாராயினர். 'பெருமானே ! தேவரீர் இந்தத் தலத்தில் இக்கோலத்திலேயே இருத்தல் வேண்டும். வைதிக நெறியும் சைவநெறியும் தழைத் தோங்கவேண்டும்" என்றுவேண்டிக்கொண்டார். இறைவரும் அவ்வாறே

வரம்தந்து "சிலநாட்களில் சோழன் ஒருவன். வருவான் அவன் இந்தத் தலத்தைச் சிறந்த நகரம் ஆக்குவான்" என்று கூறியருளினார்.

சிலகாலம் கழித்து சோழமன்னன் ஒருவன் வந்து முனிவரை வணங்கினன், முனிவர் அவனுக்கு வீரசோழன் என்று பட்டம் சூட்டினார். முனிவர் சோழனை அழைத்துக் கொண்டு திருக்கோயிலை அடைந்தார். "அரசே! நீ இந்தத் திருக்கோயிலைத் திருப்பணிசெய்க" என்றார், வீரசோழன் காடுகெடுத்து நாடாக்குவித்தான், நகரம் அமைத்தான். திருப்பணிகள் பலவும் செய்வித்தான். திருவிழா நடத்த எண்ணினன். முனிவரைக் கேட்டான். முனிவர் அரசனை நோக்கித் "தை மாதத்துப் பூசநாளைத் தீர்த்த நாளாகக் கொண்டு விழாச்செய்க; அப்பூசநாளும் தை மாதத்திலே வியாழக்கிழமையில் பூரணைத்திதியில் அமைந்து வருமாயின் உத்தமமாகும்; அதுவும் இப்போதுள்ளது; ஆதலின் திருவிழாவைச் சிறப்புறச் செய்க" என்றார். அரசனும் பூசத் திருவிழாவைச் சிறப்பாகச் செய்து முத்திபெற்றான்,

## சுகீர்த்தி வழிபட்டது :

முன்னொரு காலத்தில் காஞ்சீபுரத்தில் சுகீர்த்தி என்பவன் அரசாண்டுவந்தான். மகப்பேறு வேண்டி அகத்தியரை வழிபட்டான். அவரும் "நீ திருவிடைமருதூரையடைந்து இறைவனை வழிபாடுசெய்; புத்திரப் பேறடைவாய்" என்றார், சுகீர்த்தியும் அகத்தியரைவணங்கி விடைபெற்றான். இடைமருதை அடைந்தான். காவிரியில்படிந்தெழுந்தான். மகாலிங்கப்

பெருமானை வழிபட்டான். பிதிர்க்கள் பூசையை விதிப்படி செய்தான். அதன் பயனாகப் புதல்வனைப் பெற்றான். கோயிலில் பல திருப்பணிகள் செய்து முடிவில் சிவபதமுமடைந்தான்.


**காசியர் அருள் பெறல் :**

திருமால் ஆயர் சேரியில் குழந்தையாக விளையாடிய கோலத்தைக் காசிபர் காண விழைந்தார். நீண்ட நாளாகியும் எண்ணம் கைகூட வில்லை. இடைமருதை அடைந்தார். தவங்கிடந்தார் இறைவரும் பால கண்ணனைக் காட்சி அளித்தார். முனிவர் வணங்கினார். கண்ணபிரான் அருளியபடி காசிபர் இடைமருதீசனை வழிபடலானார். பிரணவப் பிரகாரத்தில் தல விருட்சத்தின் கீழ் காசிபர் வழிபட்ட கண்ண பிரான் எழுந்தருளியுள்ளார்.

இவ்வாறே, வசிட்டர் முதலான முனிவர்களும் திருவிடைமருதூரை அடைந்தார்கள். நாள்தோறும் தவமிருந்து மகாலிங்கப் பெருமானைப் பூசித்து எல்லா நலன்களும் பெற்றார்கள். முருகப்பெருமானும் இறைவனை வழிபட்டு இத்தலத்தில் கயிலைக்காட்சியைக் கண்டார்.

**தீர்த்தச் சிறப்பு :**

இத்தலத்திலுள்ள காருணியாமிருத தீர்த்தத்தில் நீராடுவோர் கங்கையில் நீராடிய பயனைக் காட்டிலும் மேலான பயனைப் பெறுவார்கள். கலியாண தீர்த்தம் ஐராவதத் தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன அவற்றில் நீராடுவோர். தம் பாவங்



திருக்கோயில் தரைப்படம்

கள் நீங்கப்பெற்று, வேண்டும் நலன்களை யெல்லாம் பெற்று இன்புறுவர்.

## வீரசேனன் வழிபட்டது :

வீரசேனன் என்பவன் பாண்டிய நாட்டு மன்னன் ; அவன் ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச்சென்றான். அவன் செலுத்தியஅம்பு, குறிதவறி மறைந்திருந்த மறையவன் ஒருவன்மேல் பாய அவன் இறந்தான். அது தெரிந்து வருந்தினான். மன்னன் பிரமகத்தி, கரியஉருவில் வந்து அவனைப் பற்றியது. பலவாறு அவனைத் துன்புறுத்தியது. அத்துன்பம் நீங்கப் புண்ணிய நதிகளில் நீராட எண்ணிச் சோழநாட்டை அடைந்தான். திருவிடைமருதூரைச் சேர்ந்து பூசத்துறையில் நீராடி, கோயிலில் மருதவாணரை வழிபட உள்ளே சென்றான். அப்பொழுது பிரமகத்தியைச் சிவகண அதிபர்கள் உள்ளே செல்லவிடாமல் தடுத்தனர். பழியும் தயங்கி வெளியே சென்றது. மன்னன் பலநாள் இடைமருதரை வழிபட்டு முடிவில் முத்தியும் பெற்றான்.

## சித்திர கீர்த்தி மகப்பேறு பெற்றது :

பாண்டிய நாட்டரசன் சித்திரகீர்த்தி என்பவன் அழகே உருவான சுகுணை என்பாளை மணந்து எல்லா நலங்களும் பெற்று வாழ்ந்தான். சுகுணை எல்லாநலங்களும் நிறையப் பெற்றிருந்தும் மகப்பேறு இல்லையே என்று கவலையுற்றிருந்தாள். மன்னனுடன் சுகுணை சாபாலி முனிவரை அடைந்து வழிபட்டுக் குறையிரந்தாள். அம்முனிவர் கூறியபடி இருவரும் இடைமருதை அடைந்து காருணியாமிருத தீர்த்தத்தில்,

நீராடி மருதவாணப் பெருமானை வழிபட்டார்கள். இறைவரருளால் சுசீலை ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். சித்திரகீர்த்தி பங்குனித் திருநாளில் பெருமானுக்குத் திருவிழாநடத்த ஏற்பாடுசெய்து தன் நாடு மீண்டான்.

## சிவவழிபாட்டுச் சிறப்பு :

துங்கபத்திரை ஆற்றங்கரையில் சத்தகோடி சுராலயம் என்ற ஊர் இருந்தது. அவ்வூரில் வாழ்ந்த அந்தணன் ஒருவன் சிவபூசையைச் சிறந்தமுறையில் செய்பவன், உதயத்தின் முன் மலர்கள் எடுத்து இறைவனை நாள்தோறும் பூசைசெய்து வழிபடுவது அவ்வந்தணனது வழக்கம். சிவபூசை செய்வோர் பழுதடைந்த மலரையோ பத்திரத்தையோ கொண்டு பூசைசெய்தல் கூடாது. ஒருநாள் கவனமின்றிப் புழுவினால் கடியுண்ட மலரைக்கொண்டு பூசைசெய்து விட்டான். புழுவெட்டிய பூவைச் சாத்தியதால் அவன் தன் கண்ணொளியை இழந்தான். மனம் மிக வருந்தி வசிட்டமுனிவரை அடைந்து வேண்டினான். அவர் கூறியபடி இத்தலத்தை வந்தடைந்து கனக தீர்த்தத்தில் நீராடினான்; மருதவாணரை வழிபட்டான்; விழிபெற்றான். சிவபூசைச் சிறப்பால் இவ்வந்தணனே மறுபிறவியில் விசுவாமித்திர முனிவராய்த் தோன்றினான். இம்முனிவர் தவத்தால் பிரமனினும் மேம்பட்டு விளங்கினார். இச்சிறப்புகள் எல்லாம் சிவபூசையினால் விளைந்தவை.

# வரகுண தேவர்

முன்னொரு காலத்தில் வரகுணன் என்பான் பாண்டிய நாட்டைஆண்டுவந்தான். அம்மன்னன் ஒரு சமயம் வேட்டையாடக் காட்டை அடைந்தான். வேட்டையாடித் திரும்பும்போது பொழுதுபோயிற்று. குதிரையை வேகமாகச் செலுத்தி வந்தான். பிராமணன் ஒருவன் வருகின்ற வழிப்பாதையில் படுத்து உறங்கிக் கிடந்தான், இதனை அறியாது மன்னன் குதிரையைச் செலுத்திவர, குதிரைக் குளம்பு அவன் மார்பில் அழுந்த அவன் இறந்தான். மன்னன் நிகழ்ந்ததை அறியாதவனாய் அரண்மனையை அடைந்தான்.

மன்னன் பின் வந்த சேனை வீரர்கள், பிராமணன் இறந்து கிடந்தமையைக் கண்டு மன்னனிடங் கூறினார்கள். அரசன் நடுங்கினான், பல தானதருமங் களைச் செய்தான்; செய்தும் பிரமகத்தி நீங்கவில்லை. தன்னைப்பற்றிய பழிதீரப் பல கழுவாய்கள் செய்தான். முறையாகக் கூடல் பெருமானை வலம் வந்தான்.

அவ்வாறு வலம் வருங்கால் ஒரு நாள் சோமசுந்தரப் பெருமான், அசரீரியாக "மன்னனே! சோழ அரசன் ஒருவன் உன்னோடு போர்செய்ய வந்து போரிட்டுத் தோற்று ஓடுவான்; நீயும் தொடர்ந்து அவனுடன் செல்; அப்பொழுது பக்தர்களுக்குப் பூசை செய்யும் முறையைத் தெரிவிக்கும் பொருட்டு நம்மை நாமே அருச்சனைபுரிந்த இடைமருதை அடைவாய். அத்தலத்தை அடையுமுன்னரே இந்தப் பழி உன்னைவிட்டகலும். நீயும் இன்புறுவாய்" என்று அருளினான்.

அவ்வாறே சிலநாள்கழித்துத் தன்னுட்டின் மீது படையெடுத்து வந்த சோழனோடு போரிட்டான். எதிர்த்து நிற்க மாட்டாதவனாய்ச் சோழன் புறங் கொடுத்தோடினான். பாண்டியன் இறைவனுடைய ஆணை வழி அவனைவிரட்டித் தொடர்ந்தான். சோழநாட்டை அடைந்தான். இடைமருதைச் சேர்ந்ததும் கோபுரத்தைக் கண்டான். தேரினின்றும் கீழிறங்கிப் பணிந்தான். வீதியை வலமாக வந்தான். பூசத்துறையதனில் நீராடினான். காருணியாமிருத தீர்த்தத்திலே முழுகினான். கீழைக்கோபுர வாயில் வழியே கோயிலுட்புகுந்தான். அரசனைப் பற்றிய பிரமகத்தியும் அக்கோபுர வாயிலிலேயே தங்கி விட்டது. அரசன் பெருஞ்சுமை கழிந்தது போன்று உணர்ந்து மகிழ்ந்தான். இறைவன் " மன்னனே! நீ கீழைவாயில் வழியே செல்லாதே; பிரமகத்தி அங்கே நின்று விட்டது. ஆகலின் நீ அம்பிகை சந்நிதி சென்று, பின் மேலை வாயிலின் வழியே செல் " என்றருளினார். மன்னனும் மகிழ்ந்து அவ்வாறே அம்மையையும் வழிபட்டு மேலைக் கோபுரவாயில் வழியே வெளியே சென்றான்.

வரகுணன் நாள்தோறும் ஆலயத்தை வலம்வந்து காலந்தவறாமல் பெருமானை வழிபட்டான். சொக்க நாதப் பெருமானுக்கு இவ் ஆலயத்தின் வடபால் கோயில் எடுத்தான், மேற்குக் கோபுரத்தை எழுப் பினான். தவமியற்றியதால் உடல் மெலிந்தான். ஒவ் வொரு நாளும் நூறு அசுவப்பிரதட்சிணம் செய்துவர, இறைவன் " வரகுண! கயிலையில் உள்ளபடி கொடு முடிப்பிரகாரம் ஒன்று இங்கே அமைப்பாயாக;

அந்தப் பிரகாரத்தை நீ ஒருமுறை வலம்வரின் அது நம்மை ஆயிரம்முறை வலம் வந்ததற்கு ஒப்பாகும்'. என்று கூறியருளினர்.

வரகுணன், இறைவர் அருளியபடியே கொடு முடிப் பிரகாரத்தை அமைத்து முடித்தான். அப்பிரகாரத்தில் நாடோறும் வலம் வந்தான். இப் பிரகாரமே இக்காலத்தில் சித்திரப்பிரகாரம் என வழங்கப்படுகிறது. வரகுணபாண்டியன் திருவிடை மருதூரில் தங்கியிருந்த காலங்களில் அவனுடைய சிவ அன்பின் பெருக்கால் நிகழ்ந்த அற்புதச் செயல்கள் பல. அந்நிகழ்ச்சிகள் யாவும் கோயிலின் முகப்பில் உள்ள வடபக்கச்சுவரில் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டுக் காட்சி யளிக்கின்றன.

ஒருநாள் சில காவலர் வரகுண பாண்டிய மன்னர் முன் கொடிய திருடன் ஒருவனைப் பிடித்து வந்து தண்டிக்க நிறுத்தனர். மன்னர் அக்கள்வன் மேனியில் அணிந்திருந்த திருவெண்ணீற்றைப் பார்த்து, அவனைச் சிவபக்தன் என்று போற்றி அவனை விடுவித்துப் பொருளுங் கொடுத்து அனுப் பினர்.

ஒருசமயம் நரிகள் ஊளை யிடுதலைக் கேட்டு அவை சிவபிரானை அழைப்பதாக எண்ணி அவற்றைப் பிடித்துவரச் செய்து ஆடைகளும் அணிகளும் அணிவித்து விடுவித்தார்.

ஒரு நாளிரவு தாமரைக் குளங்களில் தவளைகள் கத்த அதனைக் கேட்ட வரகுணன் அவை "ஹரஹர" என அழைப்பதாக எண்ணி அவ்விடங்களில் பொன்னும் மணிகளும் வாரி இறைத்தார்.

திருக்கோயிலில் பணிவிடை செய்யும் ஒருவன், பெருமானுடைய திருமஞ்சனத்திற்கென காயவைத் திருந்த எள்ளை அள்ளித் தின்று கொண்டிருந்தான். பிரகாரத்தில் வலம் வந்த மன்னன் அதனைப் பார்த்து அவன் செயலைக் கண்டிக்கவே, அவன் மறுபிறவி யிலும் இடைமருதீசர்க்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற விருப்பத்தால் 'எள்ளுத்தின்ற கடன் உழைத்தே தீர வேண்டும்' என்னும் பழமொழிப் படி எள்ளைத்தின்றதாகச் சொன்னான். அதனைக் கேட்ட வரகுண மன்னர் அவன் அன்பிற்கு வியந்து, 'மறுபிறவியில் இடைமருதர்க்குப் பணி புரியும் ஆவலுடைய உனக்கே நான் ஆளாக வேண்டும்' என்று சொல்லி அவன் மென்ற உச்சிஷ்டத்தைத் தானும் வாங்கி உண்டார்.

ஒருநாள், மாமிசங்கள் நீங்கிய மனிதத்தலையோடு ஒன்று வீதியிற் கிடத்தலைப் பார்த்த மன்னர், அதனை எடுத்து ஆனந்தக் கண்ணீர் வடித்து அந்த மண்டையைப் போல் தன்மண்டையோடும் இத்திருத் தலத்திலே கிடக்கும் படியான பேறு கிடைக்க வேண்டும் என வேண்டினார்.

பின்னொரு சமயம் மன்னர் வீதிவலம் வரும் பொழுது அங்கு வேப்பங் கனிகள் உதிர்ந்து கிடத்தலைப் பார்த்து, அவை சிவலிங்கங்கள் போல உருக்கொண்டிருப்பதை யுணர்ந்து, இலிங்க ரூபமான பழங்களைத் தரும் மரங்கள் வெய்யிலிற் காய்ந்து போகலாகாது என நினைந்து அவற்றிற்குப் பந்தல்கள் போட்டு மேற்கட்டிகளும் கட்டுவித்தார்.

ஒருநாள் திருக்கோயிற் சந்நிதியில் நாய் மலம் கிடக்க அதனைத் தானே எடுத்து அப்புறப்படுத்தி மகிழ்ந்தார்.

முன் பகைவனாக இருந்த சோழ அரசன் வரகுணன் சிறப்புகளை அறிந்து பகைமை நீங்கித் தன் மகளை வரகுணனுக்குச் சிறப்புடன் மணம் செய்து கொடுத்தான். திருமணத்தன்று இரவு வரகுணன் தன் மனைவியின் பேரழகினைக்கண்டு வியந்து இவள் மருதநாயகருக்கே உரியவள் என்று கருதியவனாய்க் கோயிலை அடைந்து அப்பெண்ணை ஏற்றருள வேண்டுமென இறைவனை வேண்டினான். பெருமானும் அப்பெண்ணின் வலதுகை மட்டும் வெளியில் தெரியும்படி நிறுத்தி அவளைத் தன்னுட் கொண்டார். மன்னர் மகிழ்ந்து அரண்மனை யடைந்தார்.

மறுநாட்காலை பூசை செய்வதற்குச் சிவாசாரி யார்கள் கோயிலை அடைந்தார்கள். அரசரும் நுழைந் தார். இறைவரது முடியின்மேல் வளைக்கரம் ஒன்றை யாவரும் கண்டனர். அப்பொழுது இறைவர் அதனையும் தன்னுட் கொண்டருளினார். மன்னரும் மற்றவர்களும் வியந்து போற்றினர்.

மருதவாணர் அருள்பெற்று வரகுணர் பாண்டிய நாடு அடைந்தார். 'சிவலோகத்தைக்காண விழைந்தார். அவர் விருப்பப்படி இறைவன் அவர்க்குச் சிவலோகம் காட்டியருளினார். மன்னர் கண்டு மகிழ்ந்து சாருப பதவி பெற்று இன்புற்றார்.

**பிரதட்சிணச் சிறப்பு :**

திருவிடைமருதூரில் மருதப்பெருமானை வழிபடுவதற்குக் கோயிலை யடைந்து முதல் மதிலின் உட்புறத்தில் வலம் வருதலை அசுவமேதப் பிரதட்சிணம் என்பர். இந்த அசுவமேதப் பிரதட்சிணம் செய்வோர் எல்லாநலன்களும் பெறுவர். தொடங்குங்கால் முருகப் பெருமானை வழிபட்டுத் தொடங்கவேண்டும், ஒரு மண்டலம் அரைமண்டலம் கால்மண்டலம் என்று வரையறை செய்து கொண்டு வலம் வருதல்வேண்டும். வலம் வருவதும் இருபத்துநான்கு, பன்னிரண்டு, ஏழு என்ற அளவில் அமையவேண்டும். தைமாத விழாவில் வலம் வருவோர் பெரும்பயன் பெறுவர்.

இதனை அடுத்துள்ளது கொடுமுடிப் பிரகாரம். கயிலாயமலையை வலம் வருவதாலாகும் பேறு இப்பிரகாரத்தை வலம் வருவதால் சித்திக்கும். மற்ற பிரகாரங்களை வலம் வருதலாலும் சிறந்த பலன்கள் விளைகின்றன.

**யுவனசுவன் பெற்றபேறு :**

அயோத்தி அரசன் யுவனசுவன் என்பவனுக்கு நீண்டநாள் மகப்பேறில்லை. வசிட்டரை யடைந்து தன்குறை கூறி வேண்டினான், வசிட்டர், மன்னனைத் திருவிடைமருதூர் செல்லுமாறு பணித்து அங்குப் புத்திரகாமேட்டி வேள்வி செய்யுமாறு அறிவுறுத்தினர். அரசனும் வழியிடையிலுள்ள பல தலங்களையும் வழிபட்டு இடைமருதை அடைந்தான். புத்திரகாமேட்டி யாகம் செய்தான். புத்திரப்பேறு கருதி வைத்துப் பூசித்த பொற்குட நீரைத் தாகமிகுதி

யால் குடித்தான். அவன் வயிற்றில் கரு தரித்தது. பருவம் முதிர்ந்ததும் வயிற்றைக் கிழித்துக்கொண்டு புத்திரன் வெளிப்பட்டான். புண் ஆறாது வருத்தியது. வசிட்டர் முதலான முனிவர்கள் கூறியபடி அசுவ மேதப் பிரகாரத்தில் எழுமுறை பிரதட்சணம் வந்தான். புண்ணும் ஆறியது. பின்னர் இறைவனை வணங்கித் தன்னாடு அடைந்து இன்புற்றிருந்தான்.

**மாந்தாதாச் சிறப்பு :**

மாந்தாதா, யுவனாசுவன் வயிற்றில் உதித்த புதல்வன். மாந்தாதாவின் சேனைகள் போரில் புறங் கொடுத்தோடிய கலிங்க மன்னனைக் கொன்றன. அப்பழி மன்னனைப் பற்றியது. பழிநீங்க வழி வேண்டி வசிட்டரைச் சரணடைந்தான். அவர் கூறியபடி திருவிடைமருதூர் அடைந்து அசுவமேதப் பிரதட் சணம் வந்தான். பழி நீங்கப்பெற்றான். பல நற் பணிகள் செய்தான். இறைவனுக்குத் திருவிழா நிகழ்த்த எண்ணினான். வசந்தகாலம் வந்தது. பத்து நாட்கள் வசந்த உற்சவம் என்னும் திருக்கலியாணத் திருவிழாவைக் கொண்டாடித் தீர்த்த விழாவும் செய் வித்தான். பின்னர் இறைவனருள் பெற்றுத் தன் னுடைய நாட்டை அடைந்து இன்புற வாழ்ந்தான்.

**வசுமன்னன் வழிபட்டது :**

காஞ்சியை ஆண்ட வசு மன்னன் என்பவன் யாத்திரையாகக் காசிசென்று பலதலங்களையும் வழி பட்டு நாடு திரும்பினான். அதற்குள் பகைவர்கள் அவனது நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். தன் ஆட்சிக்குரிய நாட்டை இழந்த அரசன் மனம்

வருந்திச் சாபாலி முனிவரை அடைந்தான். நாட்டைத் தான் இழந்தமைக்கான காரணத்தை அவரிடம் வினவினான். முனிவர் அவன் செய்த தீங்கைப் பின் வருமாறு கூறினார். "அரசனே! நீ முற்பிறப்பில் பெருஞ்செல்வன்; வணிகன், பல பண்டங்களும் விற்கும் தொழிலுடையோன்; உன்வீட்டின் பக்கத்தில் ஒரு அந்தணன் இருந்தான். அவ்வந்தணன் உன்னிடம் அரிசி முதலிய பொருள்களை விலைக்கு வாங்குவான், மாதம் ஒருமுறை அவற்றின் கூடுதல் தொகையை உன்னிடம் செலுத்தி வந்தான். நீ அவன் வாங்கும் பொருள்களின் விலையை மட்டும் எழுதி வைத்து மாதந்தோறும் அவன் கொடுக்கும் தொகையை எழுதாது விடுத்தனை, இவ்வாறு ஐம்பது ஆண்டுகள் ஆயின. அந்தணனும் அவன் மனைவியும் இறந்தனர். அவர்கட்கு நாலைந்து பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் சிறுவயதினர். அப்பிள்ளைகளை அரசவைக்கு இழுத்துச் சென்று வரவு வைக்காத கணக்கைக் காட்டி அந்தப் பிள்ளைகளுக்கு உரிய வீடு மற்றும் பொருள்கள் எல்லாவற்றையும் கைக் கொண்டாய். அப்பாவம் இப்போது உனக்குப் பலன் தருவதாயிற்று. அக்காலத்தில் நீ சிவபெருமானுக்கும் சிவனடியார்கட்கும் சில பொருள்களைக் கொடுத்தாய். அப்புண்ணியப் பயனால் இப்பிறவியில் அரசனாக இருந்து உலகை ஆட்சி புரிந்தாய். நீ அசுவமேதயாகம் புரிந்தால் இப்பாவம் நீங்கப்பெற்று இழந்த நாட்டையும் பெறுவாய்" என்றார், வசுமன்னன் "பொருள் இல்லையே; யாகம்செய்ய என் செய்வேன்?" என்றான் "நீ திருவிடைமருதூர் அடைந்து அசுவமேதப் பிரதட்சிணம் வந்தால் இப்பழி தீரும்" என்றார்.

அவ்வாறே அவனும் வந்து பிரதட்சிணம் செய்து இறைவரை வழிபட்டுப் பலன் பெற்றுத் தனது நாட்டைமீட்டும் பெற்ருன். அவன் இடைமருதீசர்க்கு மார்கழித் திருவாதிரைத் திருவிழாவைச் சிறப்புற நடத்தி வைத்தான்.

## அருந்தசத்துவசன் அன்பு :

இம்மன்னன் சோழநாட்டை உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். இவன் நண்பன் மித்திரன் என்னும் அந்தணன். மித்திரன் காசி யாத்திரை செல்ல விரும்பித் தன் மனைவியை அரசன் காவலில்விட்டுச் சென்ருன். காவலர்களைக் கொண்டு நண்பர் வீட்டைக் காவல்புரியச் செய்ததோடு அரசனும் காவல் செய்து வந்தான்.

மித்திரன் கங்கையாடி, சில காலங்கழித்துக் தன் ஊர் திருப்பினுன். மன்னனைச் சென்று காணுமல் அன்று மனையாளோடு தங்கி விட்டான். அன்றிரவு மாறுவேடத்தில் சென்ற மன்னன் மித்திரன் குரலைத் தவருக எண்ணி வீட்டில் ஏறிக் குதித்துக் கவனியாமல் அவனைக் கள்வன் என்ற கருத்தால் வாளால் வெட்டி வீழ்த்தினுன். பின் உண்மை உணர்ந்து வருந்தினுன். பிரமகத்தி அவனைப் பற்றியது. பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதுாரை யடைந்து அசுவமேதப் பிரகாரத்தில் வலம்வந்து பெருமானை வழிபட அவனைப் பற்றிய பழி நீங்கிச் சிறப்படைந்தான்.

### தேவவிரதன் பெற்ற சிறப்பு :

தேவவிரதன் என்ற கள்வன் திருவிடைமருதூரை அடைந்து தைப்பூசநாளில் வழிபட்டான், பெருமான் உமையோடு எழுந்தருளி வருவதைக் கண்டான். இறைவன் திருமேனியில் உள்ள திருவாபரணங்களைக் களவாட எண்ணி ஒரு உபாயஞ் செய்தான். அரசனை அணுகிக் கோயில் நிருவாக அதிகாரத்தைப் பெற்றான். வீதியில் ஓர் இருப்பிடம் அமைத்தான். ஆபரணங்கள் வைக்குமிடங்கள் நன்கு தெரிந்ததும் களவாடச் சமயம் கிட்டவில்லை.

இந்நிலையில் அவனுக்கு வலப்பக்கத்தில் பிளவை ஏற்பட்டு இறந்தான். பல பிறவிகட்குப்பின் புழுவாக, இடைமருதில் பிறந்தான். பூசதீர்த்தமாடிய புண்ணியர் ஒருவரது பாதம் படவே அப்புழு உருவம் நீங்கித் தேவவடிவமடைந்து விண்ணுலகை அடைந்தான்.

### நந்தகன் அருள்பெறல் :

நந்தகன் என்பவன் ஓர் அந்தணன், அவன் எதிர்ப்படும் பெண்களை வாள்கொண்டு வெட்டி அவர்களது அணிகலன்களைக் கவர்ந்து கொள்வான். அப்பொருள்களைக் கொடுத்து ஒருவர்பின் ஒருவராக ஐந்து பெண்களை மணந்தான். அவர்களும் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். இதனைக்கண்டு அவன் மனம் வெறுத்துத் திரியலானான். ஒருநாள் ஒரு பெண்ணை எதிர்ப்பட்டான். அவளை நெருங்கினான். அவள் நாணி ஒதுங்கினாள். அவள் மறுத்தும் இவன் அவளை மணந்தான். ஒரு குழந்தை பிறந்தது. அவள்

இறந்தான், குழந்தையைக் கொன்றான். அங்கிலேயில் பைத்தியம் பிடித்தது. பல நாடுகளில் திரிந்து முடிவில் இடைமருதூரை அடைந்தான். காவிரியில் பூசநீராடிய அந்தணர் இவனைத் தொட, பாவம் நீங்கப் பெற்றான்.

## பூசச் சிறப்பு:

உரோமச முனிவர் அறிவித்தவாறு வீரசோழ மன்னரால் தொடங்கப்பட்டது தைப்பூச விழா உத்திரட்டாதி நட்சத்திரத்தில் கொடி ஏற்றப்படும். பத்துநாள் விழா நடைபெறும். இப்பத்துநாளும் அன்பர்கள் காவிரியில் நீராடி இறைவரை வழிபட வேண்டும். அவ்வாறு வழிபடுபவர் எல்லா நலன் களும் பெற்றுச் சிறப்படைவர்.

## உணங்கல்மீன் உயிர்பெற்றது:

திருச்சத்தி முற்றத்திலிருந்து பரதவச் சிறுவன் ஒருவன் கடற்கரைக்குச் சென்றான். அங்கு உணங்கிய மீன்களை வாங்கிப் பொதிமாட்டின்மேல் ஏற்றித் தன் இன வணிகருடன் தனது ஊர்நோக்கி வந்து கொண்டிருந்தான். அம்மீன்களெல்லாம். தமது கர்வத்தினால் சிவபிரானால் சபிக்கப்பட்ட உருத்திரர் களாவர். இரவு நேரமாகிவிட்டபடியால் திருவிடை மருதூரை அடைந்தவன் உருத்திர தீர்த்தக்கரையில் தங்கி உறங்கினான். உடன் வந்தோர் இவனைவிட்டு இரவே சென்றுவிட்டார்கள். பொழுது புலர்ந்ததும் துணைவர்களைக்காணாது மிக வருந்தினான். இறைவன் அவன்முன் தோன்றி மீன்முட்டையை அவிழ்த்துக் காண்பிக்கச் செய்தார். உணங்கிய மீன்கள் எல்லாம் உயிர்பெற்றுக் குளத்தில் குதித்தன. உடன் அவை தம் உருவம் நீங்கி உருத்திரர் வடிவங்கொண்டு தேவ

லோகம் சென்றன. அதனால் அக்குளம் உருத்திர தீர்த்தம் என்று பெயர்பெற்றது. அத்தீர்த்தக் கரையில் உள்ள கோயிற் பெருமான் உலர்ந்த மீன்களுக்கு உயிரையும் நல் உருவத்தையும் கொடுத்தமையால் ' ஆன்மநாதர் ' எனப்பெயர் பெற்றார். இத்தீர்த்தமும், ஆன்மநாதர் எழுந்தருளிய திருக்கோயிலும் தெற்கு வீதியின் வடபால் உள்ளன.

## பொன்னுருவச் சோழன் :

அப்பரதகுலச் சிறுவன் " பெருமானே ! நல்ல சுமை இல்லாவிடில் இம்மாடு துள்ளிக்கொண்டு அடங்காமற் செல்லுமே ! என்செய்வேன் ?' என்றான் மருதவாணர் சிறுவனை நோக்கி, ' கீழே கிடக்கின்ற செங்கற்களைப் பொறுக்கி மூட்டையாகக் கட்டி அதனை ஏற்றிக் கொள்க ' என்றார். சிறுவனும் அவ்வாறே அக்கல் மூட்டையை மாட்டின் மீது ஏற்றிக்கொண்டு ஊர் சென்றான். திருவிடைமருதூரில நடந்தவற்றைத் தாயிடங் கூறினான். தாயும் சேயும் அரசனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினார்கள். அரசன் உத்தரவுப்படி பொதியை அவிழ்த்து நோக்க எல்லாம் பொற்கட்டிகளாக விளங்கின. அரசன் "பொருள் உங்களுடையதே எடுத்துச் செல்லுங்கள்" என்று கூறிவிட்டு இடை மருதூரை அடைந்தான். புதல்வன் வேண்டி இறைவரை வழிபட்டான். தன்னால் செய்யப்பட்ட பொன்னுருவ மகவை இறைவர் எதிர்வைத்தான். அது இறைவர் அருளால் உயிர்பெற்றது. அக்குழந்தைக்குத் திருவடி தீட்சை செய்தார். பின்னர் அரசன் கோயிலில் பற்பல திருப்பணிகள் செய்தான். முடிவில் நற்பேறு பெற்றான்.

**சுணாங்கன் கதிபெற்றது :**

சிவத்துரோகியாகிய ஒருவன் பல்வகையான. இழி பிறவிகளை எடுத்து முடிவிலே நாய்ப்பிறவியை எடுத்தான். அந்த நாயானது பல இடங்களிலே அலைந்து திரிந்து திருவிடைமருதூரை அடைந்தது. தளர்வுற்றுச்சிவயோகி ஒருவர் உறையும் மடத்தில் களைப்பு மிகுதியால் படுத்திருந்தது. அது சிவயோகியின் எச்சிலை உண்டது. அப்புண்ணிய வசத்தால் காசி மன்னன் மகளாகப் பிறந்தது. அப்பெண்ணைச் சோழமன்னன் மணந்தான், சோழன் மனைவி சிலநாள் கழித்துத் திருவிடைமருதூர் இறைவரை வழிபட்டுவர எண்ணங் கொண்டாள், சிவயோகியின் மடத்தை அடைந்தாள். அவர் உண்மை உணர்ந்து இறைவர் பால் குறையிரந்தார். இறைவரும் தனது பேரொளியில் அச்சிவயோகியையும் பெண்ணையும் சேர்த்துக் கொண்டார். அடியார் எச்சிலின் சிறப்பு இதனால் விளங்கும்.

**திரியம்பகன் திருவருட்பேறு :**

திரியம்பகன் சோழநாட்டில் அந்தணர் குலத்தில் தோன்றியவன். எல்லாக் கலைகளும் கற்ற பின்னர் குருவருளைப்பெற விழைந்தான், அருளும் பெற்றான். ஆயினும் வினைவசத்தால் தன் குரு தமது இறுதிக் காலத்தில் தரையில் எழுதிவைத்த உபதேசமொழியை உணர முடியாமல் போனான். கழைக்கூத்தி ஒருத்தி அந்த உபதேச மொழியை எழுதிக் காதோலையாக அணிந்து கொண்டு தரையில் எழுத்துக்களை அழித்து விட்டாள். அஃதுணர்ந்து அக்கழைக் கூத்தியிடம் அறிந்து கொள்ளத் திரியகம்பகன் சென்று, பல

துன்பங்களுக்கு இலக்கானன். முடிவில் அவள் மனமிரங்கி அவ்வுபதேச மொழி எழுதப்பெற்ற காதோலையைக் காட்டினள். அவளிடம் விடை பெற்று, பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதூரை அடைந்து மருதீசரை வழிபட்டான். திரியம்பகன் அவர் அருள் பெற்றுச் சிறப்படைந்தான்.

## திருக்கலியாண வரலாறு :

அகத்திய முனிவர், தமிழ் பரப்பத் தென்னடு அடைந்த காலத்து, இத்தலத்தை யடைந்தார். காசிபர் முதலாய முனிவர்கட்குச் சிவதத்துவத்தை உபதேசித்தார். அம் முனிவர்களோடு தாமும் அம்பிகையைக் குறித்துத் தவஞ்செய்து அருள்பெற்றூர். பின் அகத்தியர் அம்பிகையோடும், முனிவர்களோடும் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்யலானர். பெருமான் ஏகநாயக மூர்த்தியாய் அவர்கட்குக் காட்சி கொடுத்தார். காட்சி கொடுத்த பெருமான் முனிபுங்கவர்கட்கு வேண்டும் வரங்களைத் தந்தருளினர். முனிவர்களும் வரங்களைப் பெற்று உய்ந்தார்கள்.

அகத்தியமுனிவர், இறைவரிடம், 'முன்பு எவ்வாறு பர்வத ராசனுடைய வேண்டுகோட்கு இணங்கி, உமையை மணந்து அருள்செய்தீரோ, அவ்வாறே இத்தலத்திலும் உமது ஆணைப்படி பிரிந்து தவஞ்செய்து கொண்டிருக்கும் உமாதேவியை மணந்து, எளியோங்கட்குக் காட்சி தந்து அருள் செய்ய வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். இறைவன் அவர் வேண்டுகோட்கிணங்கி, வைகாசித் திங்களில் உத்திர நட்சத்திரத்தில் இறைவியைக்

திருமணஞ் செய்து அகத்திய முனிவருக்கும், ஏனைய முனிவர்கட்கும் காட்சி கொடுத்தருளினார்.

பின்னர் இவ்வரலாற்றுச் சிறப்பினை யுணர்ந்த, சூரியகுல அரசனாகிய மாந்தாதா என்பவன், பெரியோர்களைக் கொண்டு திருக்கலியாண விழாவினைத் தொடக்கி வைத்தான். ஆருந்திருநாள் உத்திர நட்சத்திரத்தில் திருக்கலியாணத்தை முறைப்படி நடத்திப் பெரும் பேறு பெற்றான்.

இத்திருக்கோயில் பரம்பரைத் தர்ம கர்த்தரவர்கள் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து 23-வது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள் இத் திருக்கலியாணத் திருவிழா வேதாகம முறை வழுவாது பண்டுபோல் மிகச் சிறப்பாக நடைபெற அருளி வருகின்றார்கள்.

முற்றும்

# நால்வர் துதி

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

*சிவஞானக் கடல்அருந்திக் கருமைகொடு*
*திசைகள்எங்கும் தெரிய மின்னித்*
*தவர்இனம்சூழ்ந் திடஉலகம் உணர இடித்து*
*அமண்கோடை தணப்ப ஓங்கு*
*புவனமதில சைவநெடும் பயிர்தழைப்பப்*
*பரம்கருணைப் பொருப்பின் மீது*
*கவிம்மழைகள் சொரிபுறவக் கவுணியக் கொண்*
*டலைநாளும் கருத்துள் வைப்பாம்.*

## திருநாவுக்கரசு நாயனார்

வடமருவு தென்னிழலில் கருணைவடி
வாய்விளங்கு வரதன் போல
விடம்அமிர்தம் எனப்பருகிச் சூலம்தோள்
மிசைஏற்று விடைமேல் கொண்டு
தடமருவு தரணியிடைத் திகழ்ந்திடுவா
கீசர்பத சரோரு கத்தைத
திடம்உறும்அன் பொடுதினமும் சிந்திப்போம்
துயர்கள்எல்லாம் சிந்திப் போமால்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

முதலைவளர் ஆறுஆறு தந்திடஐ
யாறுஎய்தி முடிவில் லாத
முதலைநெடும் தமிழொடுசெந் தமிழ்க்கவிதை
யால்துதித்தும ஒழிஆ விக்கண்
முதலைஒரு மகவுதரச் செய்துகந்த
முன்னோனை முகிழ்மென் கொங்கை
முதலைஇதழ்ப் பரவைமணா ளனைவணங்க
நமதுஎண்ணம் முற்றும் தானே.

## மாணிக்கவாசக சுவாமிகள்

வந்திதனிச் சிவலோகம் பெறவழுதி
பவம்நீங்க மனத்தில் நீடுஆர்
வந்திதலைக் கொமமைமுலை உமையவள்பால்
வைத்தபரன் மகிழ்வின் ஆடல்
வந்திதமபெற் றிடப்பல்லோர் வைகையின்பால்
கண்டிடச்செய் மறையோன தன்னை
வந்திதக வுறமனமே நம்தமைமெய்
அன்பரிடை வைக்கும் அன்றே.

— மருதவனப் புராணம்
— கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்

# திருவிடைமருதூர்த் தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண் - தக்கராகம் [ முதல் திருமுறை ]

திருச்சிற்றம்பலம்

ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானும் மகிழ்ந்(து)
ஈடாவுறை கின்ற இடைமரு தீதோ. 1

தடங்கொண்டதொர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண் டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண்டதொர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந் தான்றன் இடைமரு தீதோ. 2

வெண்கோவணங் கொண்டொரு வெண்டலை யேந்தி
அங்கோல்வளை யாளையொர் பாகம் அமர்ந்து
பொங்காவரு காவிரிக் கோலக் கரைமேல்
எங்கோ னுறைகின்ற இடைமரு தீதோ. 3

அந்தம்மறி யாத அருங்கல முந்திக்
கந்தங்கமழ் காவிரிக் கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேத முதல்வன்
எந்தையுறை கின்ற இடைமரு தீதோ. 4

வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசப்புகுந் தீண்டியொர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய
ஈசன்உறை கின்ற இடைமரு தீதோ. 5

வன்புற்றிள நாக மசைத்தழ காக
என்பிற்பல மாலையும் பூண்டெரு தேறி
அன்பிற்பிரி யாதவ ளோடும் உடனாய்
இன்புற்றிருந் தான்றன் இடைமரு தீதோ. 6

தேக்குந்திமி லும்பல வுஞ்சுமந் துந்திப்
போக்கிப்புறம் பூச லடிப்ப வருமால்
ஆர்க்குந்திரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்கஇருந் தான்றன் இடைமரு தீதோ. 7

பூவார்குழ லாரகில் கொண்டு புகைப்ப
ஓவாதடி யாரடி யுள்குளிர்ந் தேத்த
ஆவாவரக் கன்றனை ஆற்றல் அழித்த
ஏவார்சிலை யான்றன் இடைமரு தீதோ. 8

முற்றாததொர் பால்மதி சூடு முதல்வன்
நற்றாமரை யானொடு மால்நயந் தேத்தப்
பொற்றோளியுந் தானும் பொலிந்தழ காக
எற்றேயுறை கின்ற இடைமரு தீதோ. 9

சிறுதேரருஞ் சில்சம ணும்புறங் கூற
நெறியேபல பத்தர்கள் கைதொழு தேத்த
வெறியாவரு காவிரிக் கோலக் கரைமேல்
எறியார்மழு வாளன் இடைமரு தீதோ. 10

கண்ணார்கமழ் காழியுள் ஞானசம் பந்தன்
எண்ணார்புகழ் எந்தை இடைமரு தின்மேல்
பண்ணோடிசை பாடிய பத்தும்வல் லார்கள்
விண்ணோருல கத்தினில் வீற்றிருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவிருக்குக்குறள்

பண் - குறிஞ்சி [ முதல் திருமுறை ]

திருச்சிற்றம்பலம்

தோடொர் காதினன், பாடும் மறையினன்
காடு பேணிநின், ருடும் மருதனே. 1

கருதார் புரமெய்வர், எருதே யினிதூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. 2

எண்ணும் அடியார்கள், அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. 3

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார். பெரியா ருலகிலே. 4

பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர், டந்தி நல்லரே. 5

கழலுஞ் சிலப்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே, 6

பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையா ரின்பமே.

எடுத்தான் புயந்தன்னை. அடுத்தார் மருதனைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. 8

இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. 9

நின்றுண் சமண்தேரர், என்றும் மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. 10

கருது சம்பந்தன், மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. 11

திருச்சிற்றம்பலம்

பண் - வியாழக்குறிஞ்சி [ முதல் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவு மானான்
அருந்தவ முனிவரொ டால்நிழற்கீழ்
இருந்தவன் வளநகர் இடைமருதே. 1

தோற்றவன் கேடவன் துணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவன் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றவன் வளநகர் இடைமருதே; 2

படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவில் ஏற்றினன் ஞாலமெல்லாம்
முடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை எம்மிறையே. 3

பணைமுலை உமையொரு பங்கனொன்னார்
துணைமதின் மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநகர் இடைமருதே. 4

பொழிலவன் புயலவன் புயலியக்கும்
தொழிலவன் துயரவன் துயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநகர் இடைமருதே. 5

நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகடல் நஞ்சையுண்ட
இறையவன் வளநகர் இடைமருதே. 6

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கள் முறைவணங்க
இனிதுறை வளநகர் இடைமருதே. 7

தருக்கின அரக்கன தாளுந்தோளும்
நெரித்தவன் நெடுங்கைமா மதகரிஅன்(று)
உரித்தவன் ஒன்னலர் புரங்கள்மூன்றும்
எரித்தவன் வளநகர் இடைமருதே.

பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியர வணைமறி கடல்துயின்ற
கரியவன் அலரவன் காண்பரிய
எரியவன் வளநகர் இடைமருதே. 9

சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியில் உரையவை பொருள்கொளாதே
அந்தணர் ஓத்தினொ டரவம்ஓவா
எந்தைதன் வளநகர் இடைமருதே. 10

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ (டு) ஓங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவிராகம்

பண் - வியாழக்குறிஞ்சி [ முதல் திருமுறை ]

நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம இடர்கெடல் எளிதே. 1

மழைநுழை மதியமொ டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி யழகொடு மிளிர்வதொர்
இழைநுழை புரியணல் இடம்இடை மருதே. 2

அருமையன் எளிமையன் அழல்விடம் மிடறினன்
கருமையின் ஒளிபெறு கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன் பிணைபெணொ டொருமையின்
இருமையும் உடையணல் இடம்இடை மருதே, 3

பொரிபடு முதுகுற முளிகளி புடைபுல்கு
நரிவளர் சுடலையுள் நடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி யொளிபெற மிளிர்வதொர்
எரிவளர் சடையணல் இடம்இடை மருதே 4

வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கும் இடம்இடை மருதே. 5

கலையுடை விரிதுகில் கமழ்குழல் அகில்புகை
மலையுடை மடமகள் தனையிடம் உடையோன்
விலையுடை யணிகல னிலனென மழுவினோ(டு)
இலையுடை படையவன் இடம்இடை மருதே. 6

வளமென வளர்வன வரிமுரல் பறவைகள்
இளமணல் அணைகரை இசைசெயும் இடைமரு(து)
உளமென நினைபவர் ஒழிகழல் இணையடி
குளமண லுறமூழ்கி வழிபடல் குணமே. 7

மறையவன் உலகவன் மதியவன் மதிபுல்கு
துறையவ னெனவல அடியவர் துயரிலர்
கறையவன் மிடறது கனல்செய்த கமழ்சடை
இறையவன் உறைதரும் இடம்இடை மருதே. 8

மருதிடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுடை அகலமொ டிகலின ரினதெனக்
கருதிடல் அரியதொர் உருவொடு பெரியதொர்
எருதுடை அடிகள்தம் இடம்இடை மருதே. 9

துவருறு விரிதுகில் உடையரும் அமணரும்
அவருறு சிறுசொலை நயவன்மின் இடுமணல்
கவருறு புனல்இடை மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெடல் அணுகுதல் குணமே. 10

தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழில்இடை மருதினை இசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவிராகம்

பண் - வியாழக்குறிஞ்சி [ முதல் திருமுறை ]

திருச்சிற்றம்பலம்

விரிதரு புலியுரி விரவிய அரையினர்
திரிதரும் எயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையினர் இடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே 1

மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரும் இடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவிலர் உலகினில்
பிறிதிரை பெறும்உடல் பெறுகுவ தரிதே. 2

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென இடுபலி யவர்இடை மருதினை
வலமிட வுடனவி விலதுள வினையே. 3

விடையினர் வெளியதோர் தலைகல னெனதனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவர் இடைமரு தெனும்நகர்
உடையவர் அடியிணை தொழுவதெம் உயர்வே. 4

உரையரும் உருவினர் உணர்வரு வகையினர்
அரைபொரு புலியத ளுடையின ரதன்மிசை
இரைமரும் அரவினர் இடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. 5

ஒழுகிய புனல்மதி அரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை யடிகள தறைகழல்
எழிலினர் உறைஇடை மருதினை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருறல் இலரே. 6

கலைமலி விரலினர் கடியதோர் மழுவொடும்
நிலையினர் சலமகள் உலவிய சடையினர்
மலைமகள் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவர் இடம்இடை மருதே. 7

செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர
இருவகை விரனிறி யவரிடை மருதது
பரவுவர் அருவினை யொருவுதல் பெரிதே. 8

அரியொடு மலரவன் எனஇவ ரடிமுடி
தெரிவகை யரியவர் திருவடி தொழுதெழ
எரிதரும் உருவர்தம் இடைமரு தடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. 9

குடைமயி லினதழை மருவிய உருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவிலே
அடைமரு திருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமனம் நினைவது எழிலே. 10

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயிலவல் லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. 11

பண் - காந்தாரம் [ இரண்டாம திருமுறை ]

திருச்சிற்றம்பலம்

பொங்குநூல் மார்பினீர் பூதப்படையீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாமவேதம ஓதினீர்
எங்கும்எழிலார் மறையோர்கள் முறையால் ஏத்த இடைமருதில்
மங்குல்தோய் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 1

நீரார்ந்த செஞ்சடையீர் நெற்றித்திருக்கண் நிகழ்வித்தீர்
போரார்ந்த வெண்மழுஒன் றுடையீர் பூதம் பாடலீர்
ஏரார்ந்த மேகலையாள் பாகம்கொண்டீர் இடைமருதில்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 2

அழல்மல்கும் அங்கையி லேந்திப்பூதம் அவைபாடச்
சுழல்மல்கும் ஆடலீர் சுடுகா டல்லாற் கருதாதீர்
எழில்மல்கு நான்மறையோர் முறையால் ஏத்த இடைமருதில்
பொழில்மல்கு கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே. 3

பொல்லாப் படுதலையொன் றேந்திப் புறங் காட்டாடலீர்
வில்லாற் புரமூன்றும் ரித்தீர்விடை யார்கொடியினீர்
எல்லாக் கணங்களும் முறையா லேத்த இடைமருதில்
செல்வாய கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 4

வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீரால் ஏத்த இடைமருதில்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே. 5

சலம்மல்கு செஞ்சடையீர் சாந்தம்நீறு பூசினீர்
வலம்மல்கு வெண்மழுவொன் றேந்தி மயானத் தாடலீர்
இலமல்கு நான்மறையோ ரினிதா யேத்தஇடைமருதில்
புலம்மல்கு கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே. 6

புனம்மல்கு கொன்றையீர் புலியின் அதளீர் பொலிவார்ந்த
சினம்மல்கு மால்விடையீர் செய்யீர்கரிய கண்டத்தீர்
இனம்மல்கு நான்மறையோ ரேத்துஞ் சீர்கொள இடைமருதில்
கனம்மல்கு கோயிலே கோயிலாகக் கலந்தீரே. 7

சிலையுய்த்த வெங்கணையாற் புரமூன்றெரித்தீர் திறலரக்கன்
தலைபத்துந் திண்தோளும் நெரித்தீர் தையல்பாகத்தீர்
இலைமொய்த்த தண்பொழிலும் வயலுஞ்சூழ்ந்த இடைமருதில்
நலமொய்த்த கோயிலே கோயிலாக நயந்தீரே. 8

மறைமல்கு நான்முகனும் மாலும்அறியா வண்ணத்தீர்
கறைமல்கு கண்டத்தீர் கபாலமேந்து கையினீர்
அறைமல்கு வண்டினங்கள் ஆலுஞ்சோலை இடைமருதில்
நிறைமல்கு கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 9

சின்போர்வைச் சாக்கியரும் மாசுசேருஞ் சமணரும்
துன்பாய கட்டுரைகள் சொல்லி அல்லல்தூற்றவே
இன்பாய அந்தணர்கள் ஏத்தும்ஏர்கொள் இடைமருதில்
அன்பாய கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. 10

கல்லின் மணிமாடக் கழுமலத்தார் காவலவன்
நல்ல அருமறையான் நற்றமிழ் ஞானசம்பந்தன்
எல்லி இடைமருதில் ஏத்துபாடல் இவைபத்தும்
சொல்லு வார்க்குங் கேட்பார்க்குந் துயரமில்லையே 11

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனார்

### திருநேரிசை [ நான்காம் திருமுறை ]

திருச்சிற்றம்பலம்

காடுடைச் சுடலை நீற்றர் கையில்வெண் தலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப் பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடுஞ் சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி இடைமரு திடங்கொண் டாரே

முந்தையார் முந்தி யுள்ளார் மூவர்க்கு முதல்வ ரானார்
சந்தியார் சந்தி யுள்ளார் தவநெறி தரித்து நின்றார்
சிந்தையார் சிந்தை யுள்ளார் சிவநெறி யனைத்து மானார்
எந்தையார் எம்பிரானார் இடைமரு திடங்கொண்டாரே

காருடைக் கொன்றை மாலைக் கதிர்மணி அரவி னோடு
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதி யாய
போருடை விடையொன் றேற வல்லவர் பொன்னித் தென்பால்
ஏருடைக் கமல மோங்கும் இடைமரு திடங்கொண் டாரே.

விண்ணினார் விண்ணின் மிக்கார் வேதங்கள் நான்கும் அங்கம்
பண்ணினார் பண்ணின் மிக்க பாடலார் பாவந் தீர்க்குங்
கண்ணினார் கண்ணின் மிக்க நுதலினார் காமற் காய்ந்த
எண்ணினார் எண்ணின் மிக்கார் இடைமரு திடங்கொண் டாரே

வேதங்கள் நான்குங் கொண்டு விண்ணவர் பரவி யேத்தப்
பூதங்கள் பாடி யாட லுடையவன் புனிதன் எந்தை
பாதங்கள் பரவி நின்ற பத்தர்கள் தங்கள் மேலை
ஏதங்கள் தீரநின்றார் இடைமரு திடங்கொண்டாரே 5

பொறியர வரையி லார்த்துப் பூதங்கள் பலவுஞ் சூழ
முறிதரு வன்னி கொன்றை முதிர்சடை மூழ்க வைத்து
மறிதரு கங்கை தங்க வைத்தவ ரெத்தி சையும்
எறிதரு புனல்கொள் வேலி இடைமரு திடங்கொண் டாரே. 6

பட்டொளி சடையி னுள்ளாற் பாய்புன லரவி னோடு
சுடரொளி மதியம் வைத்துத் தூவொளி தோன்றுமெந்தை
அடரொளி விடையொன் றேற வல்லவர் அன்பர்
தங்கள்
இடரவை கெடவு நின்றார் இடைமரு திடங்கொண்டாரே. 7

கமழ்தரு சடையி னுள்ளாற் கடும்புன லரவி னோடு
தவழ்தரு மதியம் வைத்துத் தன்னடி பலரு மேத்த
மழுவது வலங்கை யேந்தி மாதொரு பாகமாகி
எழில்தரு பொழில்கள் சூழ்ந்த இடைமரு திடங்கொண்டாரே.8

பொன்திகழ் கொன்றை மாலை பதுப்புனல் வன்னிமத்தம்
மின்திகழ் சடையில் வைத்து மேதகத் தோன்றுகின்ற
அன்றவர் அளக்க லாகா அனலெரி யாகி நீண்டார்
இன்றுட னுலக மேத்த இடைமரு திடங்கொண்டாரே. 9

மலையுடன் விரவி நின்று மதியிலா அரக்கன் தூக்கத்
தலையுட னடர்த்து மீண்டே தலைவனுக் அருள்கள் நல்கிச்
சிலையுடை மலையை வாங்கித் திரிபுர மூன்றும் எய்தார்
இலையுடைக் கமலவேலி இடைமரு திடங்கெண்டாரே. 1

திருச்சிற்றம்பலம்

## திருக்குறுந்தொகை [ஐந்தாம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன் எம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே. 1

மறையின் நாண்மலர் கொண்டடி வானவர்
முறையி னுல்முனி கள்வழி பாடுசெய்
இறைவ னெம்பெரு மானிடை மருதினில்
உறையும் ஈசனை உள்குமென் உள்ளமே. 2

கொன்றை மாலையுங் கூவிள மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்றும் எந்தை பிரானிடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே. 3

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளுும இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. 4

வண்ட ணைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனர்
எண்டி சைக்கும் இடைமரு தாவென
விண்டு போயறும் மேலை வினைகளே 5

ஏறதேறும் இடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த வழகனார்க்(கு)
ஊறி ஊறி உருகுமென் உள்ளமே. 6

விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரும் மதிக்கப் படுபவர்
எண்ணி னார்பொழில் சூழிடை மருதினை
நண்ணி னாரைநண் ணாவினை நாசமே. 7

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தனார்
கந்த மாலைகள் சூடுங் கருத்தனார்
எந்தை யென்னிடை மருதினில் ஈசனைச்
சிந்தை யால்நினை வார்வினை தேயுமே. 8

வேத மோதும் விரிசடை அண்ணலார்
பூதம் பாடநின் றாடும் புனிதனார்
ஏதம் தீர்க்கும் இடைமரு தாவென்று
பாதம் ஏத்தப் பறையும்நம் பாவமே. 9

கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 10

முற்றி லாமதி சூடும் முதல்வனார்
ஒற்றி னார்மலை யாலரக் கன்முடி
எற்றி னார்கொடி யாரிடை மருதினைப்
பற்றி னாரைப்பற் றாவினைப் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

## திருக்குறுந்தொகை [ஐந்தாம் திருமுறை]

பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் வைகும்அ யலெலாம்
இறைவன் எங்கள் பிரானிடை மருதினில்
உறையும் ஈசனை உள்குமென் உள்ளமே. 1

மனத்துள் மாயனை மாசறு சோதியைப்
புனிற்றுப் பிள்ளைவெள் ளைம்மதி சூடியை
எனக்குத் தாயையெம் மான்இடை மருதனை
நினைத்திட் டூறி நிறைந்ததென் உள்ளமே. 2

வண்ட ணைந்தன வன்னியும் மத்தமும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனை
எண்டி சைக்கும் இடைமரு தாவென
விண்டு போயறும் மேலை வினைகளே 3

துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோ(டு)
அணைய லாவதெ மக்கரி தேயென
இணையி லாஇடை மாமரு தில்லெழு
பணையி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே. 4

மண்ணை யுண்டமால் காணான் மலரடி
விண்ணை விண்டயன் காணான் வியன்முடி
மொண்ணை மாமரு தாவென்றென் மொய்குழல்
பண்ணை யாயமுந் தானும் பயிலுமே. 5

மங்கை காணக் கொடார் மணமாலையைக்
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை
நங்கை மீர்இடை மருதர்இந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே. (6...11)

திருச்சிற்றம்பலம்

## திருத்தாண்டகம் [ஆறுந்திருமுறை]

### திருச்சிற்றம்பலம்

சூலப் படையுடையார் தாமே போலுஞ்
சுடர்த்திங்கட் கண்ணி உடையார் போலும்
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்
மந்திரமுந் தந்திரமு மானார் போலும்
வேலைக் கடல்நஞ்ச முண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே 1

காரார் கமழ்கொன்றைக் கண்ணி போலும்
காரானை யீருரிவை போர்த்தார் போலும்
பாரார் பரவப் படுவார் போலும்
பத்துப்பல் லூழி பரந்தார் போலும்
சீரால் வணங்கப் படுவார் போலுந்
திசையனைத்து மாய்மற்று மானார் போலும்
ஏரார் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 2

வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்
விண்ணுலகும் மண்ணுலகும் ஆனார்போலும்
பூதங்க ளாய புராணர் போலும்
புகழ வளரொளியாய் நின்றார் போலும்
பாதம் பரவப் படுவார் போலும்
பத்தர்களுக் கின்பம் பயந்தார் போலும்
ஏதங்க ளான கடிவார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 3

திண்குணத்தார் தேவர் கணங்க ளேத்தித்
திசைவணங்கச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
வியன்கொண்டல் மேற்செல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடலோ டாட லோவாப்
பரங்குன்றம் மேய பரமர் போலும்
எண்குணத்தார் எண்ணு மிரவர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 4

ஊக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
உயர்பொழி லண்ணா வி லுறைகின் றாரும்
பாகம் பணிமொழியாள் பாங்க ராகிப்
படுவெண் தலையிற் பலிகொள் வாரும்
மாகமடை மும்மதிலும் எய்தார் தாமும்
அணிபொழில்சூழ் ஆரூர் உறைகின் றாரும்
ஏகம்பம் மேயாரு மெல்லா மாவார்
இடைமருது மேவிய ஈச னாரே 5

ஐயிரண்டும் ஆறொன்று மானார் போலும்
அறுமூன்றும் நான்மூன்றும் ஆனார் போலும்
செய்வினைகள் நல்வினைகள் ஆனார் போலும்
திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
கொய்மலரங் கொன்றைச் சடையார் போலுங்
கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையுங் காய்ந்தார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 6

பிரியாத குணம்உயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத குணமொருகால் நான்கே என்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே என்பர்

தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பினாரும்
எரியாய தாமரைமேல் இயங்கி னாரும்
இடைமருது மேவிய ஈச னாரே 7

தோலிற் பொலிந்த வுடையார் போலுஞ்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆலம் அமுதாக வுண்டார் போலும்
அடியார்கட் காரமுத மானார் போலும்
காலனையுங் காய்ந்த கழலார் போலுங்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 8

பைந்தளிர்க் கொன்றையந் தாரார் போலும்
படைக்கணாள் பாக முடையார் போலும்
அந்திவாய் வண்ணத் தழகர் போலும்
மணிநீல கண்ட முடையார் போலும்
வந்த வரவுஞ் செலவு மாகி
மாறாதென் னுள்ளத் திருந்தார் போலும்
எந்தம் மிடர்தீர்க்க வல்லார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 9

கொன்றையங் கூவிள மாலை தன்னைக்
குளிர்சடைமேல்வைத்துகந்த கொள்கை யாரும்
நின்ற அனங்கனை நீறா நோக்கி
நெருப்புருவ மாய்நின்ற நிமல னாரும்
அன்ற அரக்கன் அலறி வீழ
அருவரையைக் காலா லழுத்தி னாரும்
என்றா மிடுபிச்சை யேற்றுண் பாரும்
இடைமருது மேவிய ஈச னாரே 10

திருச்சிற்றம்பலம்

## திருத்தாண்டகம் (ஆறுந்திருமுறை)

திருச்சிற்றம்பலம்

ஆறுசடைக்க ணிவர் அங்கைத் தீயர்
அழகர்படை யுடையர் அம்பொற்றோள்மேல்
நீறு தடவந் திடப மேறி
நித்தம் பலிகொள்வர் மொய்த்த பூதம்
கூறுங் குணமுடையர் கோவ ணத்தர்
கோடால வேடத்தர் கொள்கை சொல்லின்
ஈறும் நடுவும் முதலும் ஆவார்
இடைமருது மேவி இடங்கொண் டாரே, 1

மங்குல் மதிவைப்பர் வான நாடர்
மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கில் மிகவைப்பர் பால்போல் நீற்றர்
பளிக்கு வடம்புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டாள்வர்
சரிதை பலவுடையர் தன்மை சொல்லின்
எங்கும் பலிதிரிவர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 2

ஆல நிழல்இருப்பர் ஆகா யத்தர்
அருவரையி னுச்சியர் ஆணர் பெண்ணர்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
கருத்துக்குச் சேயார்தாங் காணா தார்க்குக்
கோலம் பலவுடையர் கொல்லை யேற்றர்
கொடுமழுவர் கோழம்பம் மேய ஈசர்
ஏல மணநாறும் ஈங்கோய் நீங்கார்
இடைமருது மேவி இடங்கொண் டாரே, 3

தேசர் திறம்நினைவார் சிந்தை சேருஞ்
செல்வர் திருவாரூர் என்றும் உள்ளார்
வாச மலரின்கண் மான்தோல் போர்ப்பர்
மருவுங் கரியுரியர் வஞ்சக் கள்வர்
நேச ரடைந்தார்க் கடையா தார்க்கு
நிட்டுரவர் கட்டங்கர் நினைவார்க் கென்றும்
ஈசர் புனற்பொன்னித் தீர்த்தர் வாய்த்த
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 4

கரப்பர் கரியமனக் கள்வர்க் குள்ளங்
கரவாதே தந்நினைய கிற்பார் பாவம்
துரப்பர் தொடுகடலின் நஞ்ச முண்பர்
தூய மறைமொழியர் தீயா லொட்டி
நிரப்பர் புரமூன்றும் நீறு செய்வர்
நீள்சடையர் பாய்விடைகொண் டெங்கும்ஐயம்
இரப்பர் எமையாள்வர் என்னுள் நீங்கார்
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 5

கொடியார் இடபத்தர் கூத்து மாடிக்
குளிர்கொன்றை மேல்வைப்பர் கோல மார்ந்த
பொடியாரு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூணு நூலர்
அடியார் குடியாவர் அந்த ணாளர்
ஆகுதியின் மந்திரத்தார் அமரர் போற்ற
இடியார் களிற்றுரியர் எவரும் போற்ற
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 6

பச்சை நிறமுடையர் பாலர் சாலப்
பழையர் பிழையெலாம் நீக்கி யாள்வர்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனொன்று கையேந்தி இல்லந் தோறும்

பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சை மிகஅறிவர் என்று முள்ளார்
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 7

காவார் சடைமுடியர் காரோ ணத்தர்
கயிலாயம் மன்னினார் பன்னு மின்சொல்
பாவார் பொருளாளர் வாளார் கண்ணி
பயிலுந் திருவுருவம் பாகம் மேயார்
பூவார் புனலணவு புன்கூர் வாழ்வர்
புரமூன்றும் ஒள்ளழலாக் காயத் தொட்ட
ஏவார் சிலைமலையர் எங்குந் தாமே
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 8

புரிந்தார் நடத்தின்கட் பூத நாதர்
பொழிலாரூர் புக்குறைவர் போந்து தம்மில்
பிரிந்தார் அகல்வாய பேயுந் தாமும்
பிரியார் ஒருநாளும் பேணு காட்டில்
எரிந்தார அனலுகப்பர் ஏழி லோசை
எவ்விடத்துந் தாமேயென் றேத்து வார்பால்
இருந்தார் இமையவர்கள் போற்ற என்றும்
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 9

விட்டிலங்கு மாமழுவர் வேலை நஞ்சர்
விடங்கர் விரிபுனல்சூழ் வெண்காட் டுள்ளார்
மட்டிலங்கு தார்மாலை மார்பில் நீற்றர்
மழபாடி யுன்னுறைவர் மாகா ளத்தர்
சிட்டிலங்கு வல்லரக்கர் கோனை யன்று
செழுமுடியுந் தோளைந்நான் கடரக் காலால்
இட்டிரங்கி மற்றவனுக் கீந்தார் வென்றி
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 10

திருச்சிற்றம்பலம

## சுந்தரமூர்த்தி நாயனார்

### [ஏழாம் திருமுறை] பண் - தக்கேசி

### திருச்சிற்றம்பலம்

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நான்உழன் றுட்டடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீயிருந் தென்செய்தி மனனே
அங்க ணாஅர னேயென மாட்டா
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 1

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றியில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
அஞ்சி னேன்நம னாரவர் தம்மை
உரைப்பன் நான்உன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்ப னேனுக்கோர் உய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 2

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருளிலை நாளும்
என்னெ னக்கினி யிற்றைக்கு நாளை
என்றி ருத்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேயுன சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்ன மென்றனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே.

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன்
சிறுச்சிறி தேஇரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடுமெம் மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீயெனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 4

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள்
ஐவ ரும்புர வாசற ஆண்டு
கழித்துக் காற்செய்து போயின பின்னைக்
கடைமு றையுனக் கேபொறை யானேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை
வேண்டேன் மானுட வாழ்க்கைஈ தாகில்
இழித்தேன் என்றனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 5

குற்றந் தன்னொடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை கள்பல ஞானங்
கடிய வாயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன்
பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேனெனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 6

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றஞ் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வச மல்ல

நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்த மர்நர கத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 7

ஐவ கையர் ஐயரவ ராகி
ஆட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வ கையவர் வேண்டுவ தானால்
அவர வர்வழி ஒழுகிநான் வந்து
செய்வ கையறி யேன்சிவ லோகா
தீவ ணாசிவ னேயெரி யாடீ
எவ்வ கையெனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 8

ஏழை மானுட இன்பினை நோக்கி
இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் குந்நமக் கென்று
வஞ்ச வல்வினை உள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர்தஞ் செல்கதிப் பக்கம்
போக மும்பொருள் ஒன்றறி யாத
ஏழை யேனுக்கோர் உய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 9

அரைக்குஞ் சந்தனத் தோடகில் உந்தி
ஐவ னஞ்சுமந் தார்த்திரு பாலும்
இரைக்குங் காவிரித் தென்கரை தன்மேல்
இடைம ருதுறை எந்தை பிரானை
உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
உள்ளத் தாலுகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையு மின்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

**மாணிக்கவாசகர் - திருவாசகம்**
**கீர்த்தித் திருவகவல்**

இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தஅப் பரிசும்.

**போற்றித் திருவகவல்**

இடைமரு துறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி

**திருப்பூவல்லி**

எந்தைஎந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

**திருப்பொன்னூசல்**

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களும் காணா மலரடிகள்
தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்றங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்றங்கு இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங்கு அனநடையீர் பொன்னூச லாடாமோ.

**திருவேசறவு**

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமாறு
அருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே

## கருவூர்த்தேவர் - திருவிசைப்பா

### பண் - பஞ்சமம்

### திருச்சிற்றம்பலம்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை
மொழுப்பி னழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா ணவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 1

இந்திர லோக முழுவதும் பணிகேட்(டு)
இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
அகந்தோறும் பலிதிரி யடிகள்
தந்திரி வீணை கீதமுன் பாடச்
சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதம் தீங்குழ லெங்கும்
மருவிடந் திருவிடை மருதே. 2

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 3

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்(கு)
அடியனேன் உள்கலந்து அடியேன்
பணிமகிழ்ந் தருளும் அரிவைபா கத்தன்
படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை அரையிலோ ராடை
சுடருமிழ் தாஅத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
மருவிடந் திருவிடை மருதே. 4

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
படுவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுரு வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிகள் உடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 5

எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்டு
ஏப்பமிட் டலங்கெயிற் றழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணமெழுந் தாடும்
தூங்கிருள் நடுநல்யா மத்தே
அருள்புரி முறுவல் முகிழ்நிலா எறிப்ப
அந்திபோன் றொளிர் திருமேனி
வரியர வாட ஆடுமெம் பெருமான்
மருவிடந் திருவிடை மருதே 6

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்கு
ஆதனேன் மாதரார் கல்வித்

தொழிலையும் நெஞ்சம் இடர்படா வண்ணம்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 7

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்தீப் பட்டஇட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றுயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா ணவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 8

கலங்கலம் பொய்கைப் புனல்தெளி விடத்துக்
கலந்தமண் இடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே! வம்பனே னுடைய
புலங்கலந் தவனே! என்றுநின் றுருகிப்
புலம்புவார் அவம்புகார் அருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. 9

ஒருங்கிரு கண்ணின் எண்ணில்புன் மாக்கள்
உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கண நின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழில் மருதயாழ் உதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா ணவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 10

திருச்சிற்றம்பலம்

## சேந்தனார் -திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
  தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர்
  சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
  விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதம்கடந் தானுக்கே
  பல்லாண்டு கூறுதுமே

சீரும் திருவும் பொலியச் சிவலோக
  நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
  தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழறஉ ழறி
  உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
  பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

## திருமூலர் திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன்பின் தாழ்சடை யோனே.

திருச்சிற்றம்பலம்

## பதினோராந் திருமுறை

### திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும — ஒருவர்
கருதா என்பார்க்கும் கறைமிடற்றாய் தொல்லை !
மருதா!என் பார்க்கு வரும்.

ஓராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே – யாராயோ
எண்ணுவார் உள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம்.

வளையார் பசியின் வருந்தார்
பிணியின் மதனன் அம்புக்(கு)
இளையார் தனங்கண்(டு) இரங்கிநில்
லார்இப் பிறப்பினில் வந்(து)
அளையார் நரகினுக(கு) என்கட்
வார்பொன் னலர்ந்த கொன்றைத்
தளையார் இடைம தன்னடி
யாரடி சார்ந்தவரே.

## நேரிசையாசிரியப்பா

கொண்டலின் இருண்ட கண்டத் தெண்டோட்
செவ்வான் உருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ! முக்கட் செல்வ!
தேவ தேவ! திருவிடை மருத!.

மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை யாடு மப்ப!
கைலாய வாண! கௌரி நாயக!
நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து

பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையு
மழைக்கண் தடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்குங் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்

வான்முறை படைத்த நான்முகத் தொருவனும்
தாரகற் செற்ற வீரக் கன்னியும
பூவின் கிழத்தியும் நாவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடியுருத் திரரும்
ஆளுப் பெருந்திறல் வானோர் தலைவனும்

செயிர்தீர் நாற்கோட்(டு) அயிரா வதமும்
வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனுஞ் செந்தீக் கடவுளும்
நிருதியுஞ் சமனுஞ் சுருதிகள் நான்கும்
வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்.

எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனுங் கபிலனும் அகத்தியன் றானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்
வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்

திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தலமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்

ஓடும் பன்னரி ஊளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல அளித்தும்
குவளைப் புனலில் தவளை யரற்ற
ஈசன் தன்னை ஏத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்.

வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த

தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல வெம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத்து இரந்தும்
கோயின் முற்றத்து பீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்றுநாய்க் கட்ட மெடுத்தும்

காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்

இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையவர் நிற்க யானு மொருவன்
பத்தி யென்பதோர் பாடு மின்றிச்
சுத்தனாயினுந் தோன்றாக் கடையேன் நின்னை.
இறைஞ்சிலன் ஆயினும் ஏத்திலன் ஆயினும்

வருந்திலன் ஆயினும் வாழ்த்திலன் ஆயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுல கனைத்தும் நன்மை தீமை
ஆனவை நின்செயல் ஆதலின்
நானே யமையும் நலமில் வழிக்கே.

திருச்சிற்றம்பலம்

## பெரியபுராணம்

### திருஞானசம்பந்தர் புராணம்

ஓங்குதிருப் பதிகம் ஓடேகலன்என் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினால்
ஈங்கெனையா ளுடையபிரான் இடைமரு தீதோஎன்று
பாங்குடைய இன்னிசையால் பாடிஎழுந் தருளினார்.

அடியவர்கள் எதிர்கொள்ள எழுந்தருளி அங்கணைந்து
முடிவில்பரம் பொருளானார் முதற்கோயில் முன்
இறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய.

பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடிஅமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோ(டு)
அரவுசடைக் கணிந்தவர்தம் தாள்போற்றி ஆர்வத்தால்
உரவுதிருத் தொண்டருடன்பணிந்தேத்தி உறையுநாள்.

திருச்சிற்றம்பலம்

## அருணகிரிநாதர் திருப்புகழ்

### பரமசுகம் அருளுக

தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானஞ தான தானஞ தனதன தனதான

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆகமாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி அவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொருமொரென உடல்
வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய்
அவரொரு பெரியோராய்

அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யார்வோர் தேவி மாருமாய்
விழுசுவரை அரிவையர்கள் படுகுழியையில்லையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய்
அவியுறு சுடர்போலே

வெறுமிடிய ரொருதவசி அமுதுபடை எனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்
முடுகியவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட
மொழியுமொரு
வீணி யார்சொலே மேல தாயிட
விதிதனை நினையாதே

மினுகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோஎனு
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாய் ஆளி வாயராய்
மிடையுற வருநாளில்

வறுமைகளும் முடுகிவர உறுபொருளும் நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாடிட ஈளை மேலிடா
வழவழென உமிழுமது கொழகொழென ஒழுகிவிழ
வாடி ஊனெலாம் நாடி பேதமாய்
மனையவள் மனம்வேறாய்

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனு வாலர் சீயெனு
கனவுதனில் இரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு
வலதழிய விரகழிய உரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள்
மனிதர்கள் பலபேச

இறுதியதொடறுதியான உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா
எனதுடமை எனதடிமை எனுமறிவு சிறிதுமற
மொலேலெனு வாயை ஆவெனு
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்
எரிதனில் இடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசிடார்களோ பாச நாசனே
இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயும் நானுமாய்
இருகும்வகை பரமசுக மதனையருள் இடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா
இமையவர் பெருமானே.

## கவிபாடி வழிபாடு அருளுக

தனன தனதனன தான தானதன
தனன தனதனன தான தானதன
தனன தனதனன தான தானதன தத்ததான

இலகு குழைகிழிய வூடு போயுலவி
அடர வருமதன னூல ளாவியெதிர்
இளைஞ ருயிர்கவர ஆசை நேர்வலைபொ
திந்தநீலம்

இனிமை கரைபுரள வாகு லாவுசரி
நெறிவு கலகலென வாசம் வீசுகுழல்
இருளின் முகநிலவு கூரமானுடைய
கன்றுபோக

மலையு மிதழ்பருகி வேடை தீரவுடல்
இறுக இறுகியநு ராக போகமிக
வளரு மிளகுதன பாரமீதினில்மு யங்குவேனை

மதுர கவியடைவு பாடி வீடறிவு
முதிர அரியதமி ழோசை யாகவொளி
வசன முடையவழி பாடுசேருமருள்
தந்திடாதோ.

கலக அசுரர்கிளை மாள மேருகிரி
தவிடு படவுதிர வோல வாரியலை
கதற வரியரவம் வாய்வி டாபசிதணிந்தபோகக்

களப மயிலின்மிசை யேறி வேதநெறி
பரவு மமரர்குடி யேற நாளும்வினை
கடிய கொடியவினை வீழ வேலைவிட
வந்தவாழ்வே

அலகை யுடனடம தாடு தாதைசெவி
நிறைய மவுனவுரை யாடு நீபஎழில்
அடவி தனிலுறையும் வேடர் பேதையைம
ணந்தகோவே

அமணர் கழுவில்விளை யாட வாதுபடை
கருது குமரகுரு நாத நீதியுள
தருளும் இடைமருதில் மேவு மாமுனிவர்
தம்பிரானே.

தவநெறி அருளுக

தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தனனதன தனனதன தந்தனந் தந்தனத் தந்ததான

படியையள விடுநெடிய கொண்டலுஞ் சண்டனும்
தமரசது மறையமரர் சங்கமுஞ் சம்புவும்
பரவரிய நிருபன்விர கன்சுடுஞ் சம்பனன்
செம்பொன்மேனிப்

பரமனெழில் புனையுமர வங்களுங் கங்கையுந்
திருவளரு முளரியொடு திங்களுங் கொன்றையும்
பரியகுமி ழறுகுகன தும்பையுஞ் செம்பையுந்
துன்றுமூலச்

சடைமுடியி லணியுநல சங்கரன் கும்பிடுங்
குமரனறு முகவன் மதுரந்தருஞ் செஞ்சொலன்
சரவணையில் வருமுதலி கொந்தகன் கந்தனென்
றுய்ந்துபாடித்

தணியவெரலி புகலும்வித மொன்றிலுஞ் சென்றிலன்
பகிரவொரு தினையளவு பண்புகொண் டண்டிலன்
தவநெறியி லொழுகிவழி பண்படுங் கங்கணஞ்
சிந்தியாதோ

கடுகுபொடி தவிடுபட மந்திரந் தந்திரம்
பயிலவரு நிருதருட லப்பிளந் தம்பரங்
கதறிவெகு குருதிநதி பொங்கிடுஞ் சம்ப்ரமங்
கண்டுசேரக்

கழுகுநரி கொடிகருட னங்கெழுந் தெங்குநின்
றலகைபல திமிலைகொடு தந்தனந் தந்தனங்
கருதியிசை பொசியுநசை கண்டுகண் டின்புறுந்
துங்கவேலா

அடல்புனையும் இடைமருதில் வந்திணங் குங்குணம்
பெரியகுரு பரகுமர சிந்துரஞ் சென்றடங்
கடவிதனி லுறைகுமரி சந்திலங் குந்தனந்
தங்குமார்பா

அருணமணி வெயிலிலகு தண்டையம் பங்கயங்
கருணைபொழி வனகழலி லந்தமுந் தம்பமென்
றழகுபெற நெறிவருடி யண்டருந் தொண்டுறுந்
தம்பிரானே.

## சிவஞானம் அருளுக

தனதனதன தான தானன
தனதனதன தான தானன
தனதனதன தான தானன தந்ததான

புழுகொடுபனி நீர்ச வாதுடன்
இருகரமிகு மார்பி லேபன
புளகிதஅபி ராம பூஷித கொங்கையாலே

பொதுவினில்விலை கூறு மாதர்கள்
மணியணிகுழை மீது தாவடி
பொருவனகணை போல்வி லோசன
வந்தியாலே

மெழுகெனவுரு காவ ஞர்தம
திதயகலக மோடு மோகன
வெகுவிதபரி தாப வாதனை கொண்டுநாயேன்

மிடைபடுமல மாயை யால்மிக
கலவியஅறி வேக சாமிநின்
விதரணசிவ ஞான போதகம் வந்துதாராய்

எழுகிரிநிலை யோட வாரிதி
மொகுமொகுவென வீச மேதினி
இடர்கெடஅசு ரேசர் சேனைமு றிந்துபோக

இமையவர்சிறை மீள நாய்நரி
கழுகுகள்கக ராசன் மேலிட
ரணமுககண பூத சேனைகள் நின்றுலாவச்

செழுமதகரி நீல கோமள
அபிநவமயி லேறு சேவக
செயசெயமுரு காகு காவனர் கந்தவேளே

திரைபொருக்கீர மோர்து காவிரி
வருபுனல்வயல் வாவி சூழ்தரு
திருவிடைமரு தூரில் மேவிய தம்பிரானே.

திருச்சிற்றம்பலம்

## க்ஷேத்திரக்கோவைப்

## பிள்ளைத்தமிழ்

திருவலஞ் சுழியைங்க ரத்தனா லயமெனத்
திருவேர கப்பதியெனும்
திருநகர முன்பொனா லயமெனச் சேய்ஞலூர்
திகழ்தண்டி யாலயமென

மருவுமா வடுதுறைவன் விடையினா லயமென்ன
வந்தகு ரியனாலயம்
மகிழ்சூரி யன்கோயி லாமெனச் சீகாழி
வடுகனா லயமாமெனப்

பெருகுசிற் சபைசபா பதியினா லயமெனப்
பேசுதிரு வாரூர் நகர்
பெரியநா யகர்கோயி லென்னவா னோர்களும்
பேணுமிவை மத்தியாகத்

தருமருத வணமகா லிங்கநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே
தந்தைவெண் காடர்புக ழெந்தைமுரு கேசனே
சப்பாணி கொட்டியருளே.

திருச்சிற்றம்பலம்



அருள்மிகு பெருநலமாமுலையம்மை உடனுறைகிய மகாலிங்கப்பெருமான்

## ஸ்ரீ ஏகநாயக ரூசல்

சீர்பூத்த நான்மறையா கமங்கள் வாழத்
திருநந்தி கணங்களொன்றுஞ் செழித்து வாழத்
தார்பூத்த சித்தாந்த சைவம் வாழத்
தமிழ்மறையும் ஐந்தெழுத்துந் தழைத்து வாழப்
பேர்பூத்த மறையவரோ டடியார் வாழப்
பெரும்பொன்னித் திருநாடு பிறங்கி வாழ
ஆர்பூத்த இடைமருதங் கோயி லாக்கொண்டு
அமர்ஏக நாயகரே யாடி ரூசல். 1

மாமேவு புகழ்வீர சோழ ஞற்று
மணிமதில்சூழ் திருக்கோயி லிடையின் மேவும்
தூமேவு மலங்கார மண்ட பத்தில்
துலங்குமணிப் பொன்னூச லிங்க மேவிப்
பூமேவு பெருநலமா முலையா ளோடும்
பொன்னனைய மேனியினீ ராடி ரூசல்
தேமேவும் அருட்கடலே யாடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல். 2

தளம்பூத்த நறுங்கொன்றைத் தாம மாடத்
தடந்திரைமந் தாகினியாம் தையலாடக்
குளம்பூத்த விழியாடக் குழைக ளாடக்
குலவுமணிப் பூம்பணிகள் குலவி யாட
வளம்பூத்த பல்லுயிரும் வருந்தாது ஈன்று
வளர்த்தருளுந் தாய்மருங்கின் மகிழ்வுற் றூட
உளம்பூத்த இடைமருத ராடி ரூசல்
உவந்தேக நாயகரே யாடி ரூசல். 3

இந்திரனுஞ் சசியுமொரு வடந்தொட் டாட்ட
இந்திரையு முகுந்தனுமோர் வடங்தொட்டாட்டச்
சந்திரனோர் தவளசரோ ருகத்து மேய
தையலு நான் முகனுமொரு வடந்தொட்டாட்ட
அந்தர நாட் டவர்களொடு மரம்பை மாரும்
அகமகிழ்ந்து போற்றியொரு வடங்தொட்டாட்ட
மந்திரமா விடைமருதுங்கொண்டு வாழும்
மகாலிங்க நாயகரே யாடி ரூசல் 4

ஒருஞானப் பாலருந்தி யம்பொற் றாளம்
ஒண்டரளச் சிவிகைபந்த ருவந்து பெற்றோர்
தருஞானத் தைப்பூசங் காண்பா யென்று
தவளவெள்ளைப் பெண்ணுக்கிக் தந்த
எங்கோன்
திருஞான சம்பந்தச் செல்வ ரோதுஞ்
செந்தமிழ்மா மறையன்பர் தெரிந்து பாட
அருஞானத் திருவுருவீ ராடி ரூசல்
அருண்மருத வாணரே யாடி ரூசல். 5

புடைமருதப் பெருந்துறையி லருள்பெற் றென்றும்
பூசையறு காலத்தும் வழாம லாற்றி
இடைமருதஆ நந்தத்தே னென்றே யன்பின்
ஏத்துபிரா னருளுச லடியார் பாட
அடைமருதக் கிளிமொழியோ டாடி ரூசல்
அனைத்துயிரும் புரந்தருள்வீ ராடி ரூசல்
இடைமருத நாயகரே யாடி ரூசல்
ஏகநா யகப்பெருமான் ஆடி ரூசல். 6

அரசரெலாம் அடிவணங்க மதுரை காத்த
அண்ணல்வர குணதேவற் கச்சம் நீங்க
விரசுபழி யோட்டியர லோகங் காட்டும்
மேன்மைதனை மெய்யன்பர் வியத்து பாடப்

பிரசமலர்த் தொடையசைய வாடி ரூசல்
பிறையணிந்த செஞ்சடையீ ராடி ரூசல்
இரசதவண் கிரியுடையீ ராடி ரூசல்
இடைமருத வாணரே யாடி ரூசல். 7

தேனாடு நறுங்கொன்றைத் தொடைய லாடத்
தெளிபுனற்கங் காநதியின் றிரைக ளாட
மானாடத் திருக்கரத்து மழுவு மாட
மாரனிளந் தென்றலந்தேர் மருவியாட
வானாட மண்ணாட அனைத்தும் இன்ப
வாரிபடிந் தாடவுமை மருங்கின் மேவித்
தானாடத் தருமமெலாந் தழைவற் றாடத்
தயங்குமிடை மருதரே யாடி ரூசல். 8

வரையரையன் மேனையொடு மகிழ்ந்து காண
வரைந்தாடுந் திருவூச லாட்டுங் கூடல்
அரையன்மலை யத்துவசன் மனைவி காண
அன்றாடுந் திருவூச லாட்டுங் காணப்
புரையுடையேங் கண்டுய்ய வாடி ரூசல்
புண்ணியவெண் விடையுடையீ ராடி ரூசல்
தரைசெய் தவப் பயனாய மருத நீழல்
தங்கியருள் செல்வரே யாடி ரூசல். 9

பொருவிடைவா கனமுடையீ ராடி ரூசல்
பொங்கரவப் பூணுடையீ ராடி ரூசல்
கருவிடையாம் புகுந்தூச லாடா வண்ணங்
காத்தருளும் பெருமானே யாடி ரூசல்
வருவிடையர் குலந்தழைப்ப வருமா னுயர்
வடித்தவிசை கொளுஞ்செவியீ ராடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல்
தேவாதி தேவரே யாடி ரூசல். 10

**திருச்சிற்றம்பலம்**

## ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு

சீர்மலிந்த கல்வியொடு செல்வமுமேன் மேல்வயங்கி
ஏர்மலிந்த மாட விடைமருத நாயகரோ. 1

எல்லாத் தலத்து மிடைமருதே மேலாமென்
றெல்லா மளித்தாட் கிளம்பியருண் மாமணியோ. 2

வாய்ந்த கயிலை வடிவா மருதநிழல்
ஏய்ந்த வுமையோ டெழுந்தருளி வாழரசோ. 3

மாகா ரிருளினிடை வந்தே யுருத்திரர்கள்
ஏகா தசரு மிறைஞ்சவெளிப் பட்டவரோ. 4

மாதுமையாள் பன்னாட்செய் மாதவங்கண் டன்னாள்
[முன்
சோதிமகா லிங்கமாய்த் தோன்றியருள் சின்மயரோ 5

கோனேயென் பார்தெளிந்து கொண்டாடு மாறு
[ தன்னைத்
தானே யருச்சித்த தண்கருணை வாரிதியோ 6

நாக மொருதடத்தின் கட்படிய மற்றதன்றன்
ஆகம் பசும்பொன்னு வாக்கிய நளாரமுதோ. 7

பணவரவம் பூணும் பரனேயென் றுண்ட
கணபதிபூ சிக்கக் கனிவு முதற்பொருளோ. 8

மாட்சி யுரோமசன்றன் மாதவங்கண் டன்னையொடு
காட்சிகொடுத் தன்னான் கவலை கடிந்தவரோ 9

இலங்கு குறுமுனிவ னென்றுவரு மென்று
நலங்கொ ளவன்வரவை நாடியுறை நாயகமோ. 10

மண்ணைக் கொடேலென்று மாவலிக்குச் சொற்ற
வன்றன்
கண்ணைக் கொடுத்தவனைக் காக்காருளுங்
கற்பகமோ. 11

இன்பகற்று பாவத் திடைப்பட்டோர் மூழ்கினவர்
துன்பகற்று பூசத் துறையாடுஞ் சுந்தரமோ. 12

சீமான் வரகுணப்பேர்த் தென்னவன்றன் காதலியைக்
கோமான் நீ கொள்ளெனவே கொண்டகுணக்
குன்றமோ. 13

அல்லார் களத்தா யருளென்பார் காதலித்த
எல்லாம் அருளும் இடைமருதம் ஆர்கரும்போ. 14

தேனே சுவையமுதோ தித்திக்குஞ் செய்யகனி
தானே மலைபயந்த தையலா ளாருயிரோ, 15

பிரமகத்தி முன்னும் பெரும்பாவ நீக்கி
வரமளித்து மன்னுயிரை வாழச்செய் மாமணியோ. 16

பிணிக்கோதில் பூம்புகார்ப் பிள்ளையார் சொல்மும்
மணிக்கோவை கொண்டு மனமகிழ்ந்த வள்ளலோ. 17

வயமேவச் சூழ்வோர்கள் வைக்குமடி யொன்றற்கு
அயமேதப் பேறருளு மாரருட்சிந் தாமணியோ. 18

தெய்வமில்லை யென்னுஞ் சிதடர்கடி வாய்மூடச்
செய்வரத ஞகியநந் தெய்வ சிகாமணியோ 19

நீதஞ்ச மென்றவர்க்கா நீடுகம லைத்தெருவில்
பாதஞ் சிவக்கப் பரவைமனை சென்றவரோ. 20

விண்ணவரும் பாதலத்தின் மேயவரும் எண்திசையின்
கண்ணவரும் நந்தவத்தைக் காதலிக்க வந்தவரோ. 21

காவணங் காட்டுங் கூடிமனையிற் சுந்தரரை
ஆவணங் காட்டி யடிமைகொண்ட வந்தணரோ. 22

திருந்தடியைப் போற்றிசெயுஞ் செல்வரை
[முன் கோலக்
குருந்தடியி லாண்ட குரவர் சிகாமணியோ. 23

நந்தா வுலக நடுங்கா வணஞ்சடையில்
மந்தா கினியை மணந்தமண வாளரோ. 24

மன்னுயிர்கள் யாவும் வயங்குவநா மென்பதைமுன்
தென்னன் பிரம்படியாற் றேற்றுவித்த மெய்ப்
பொருளோ. 25

கானந் தனில்விசயன் காண்டீபத் தாலடியுண்டு
ஈனந் தவிர்படையொன் றீந்தருளு மெம்மானோ. 26

துங்கத் தமிழ்மொழியின் றூய்மையெவ ரும்மறியச்
சங்கப் புலவரிடைத் தங்கியருள் நாவலரோ. 27

செயிரா வனவனைத்துந் தீர்த்தருளும் பொன்னி
அயிரா வணத்துறையி லாடியரு ளங்கணரோ. 28

ஆரா வமுதோ அருட்கடலோ எம்முடைய
தீராத துன்பமெலாந் தீர்க்குஞ் சிவக்கொழுந்தோ. 29

கருது மடியார் கவலையெலாம் போக்கி
மருத நிழலினிடை வாழ்ந்தருளு மாமணியோ. 30

— தாக்ஷிணாத்திய கலாநிதி; மகாமகோபாத்தியாய;
டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

## திருவிடைமருதூர்

# மருதவாணர் தோத்திரப் பதிகம்

திருவார் நினது திருநீறே
    தீர்க்கும் ஆர்க்கும் உடல்பிணியும்
கருவார் பிறந்தை யடற்பிணியும்
    எனல்கண் டடைந்தேன் கருதுநவோடு
அருவார் கருணைப் பெருங்கடலே
    அடியார்க்கு எய்ப்பில் வைப்பேநன்
மருவார் மலர்சார் இடைமருத
    வாணு அடியேற்கு இரங்காயே. 1

ஏழைத் திருமால் அயன்ஆதி
    இமையோர் பலரும் இறவாது
பாழைக் கருதா லாலநுகர்
    பரமா பரமகருணையனே
ஊழைப் புறங்கண் வலியாநினை
    உணருந் திறலி ரைன்றே
வாழைப் படப்பை இடைமருத
    வாணு அடியேற்கு இரங்காயே. 2

ஊனம் அளக்கும் திறந்தொழும்பின்
    ஒருப்பட் டார்பால் சிறிதுமிலாய்
தானம் அளக்கும் பெருநலமா
    முலையோர் பாகம் நயந்தவனே

ஏனம் அளக்கும் திறம்அரிதாய்
இசைப்பார்க் கெளிதாம் திருவடியாய்
வானம் அளக்கும் இடைமருத
வாணா அடியேற்கு இரங்காயே. 3

நீறு புனைவேன் ஐந்தெழுத்து
நெஞ்சங் கணிப்பேன் நின்னாமம்
பேறு பிறிதில் எனப்புகல்வேன்
பிணிக்காட் பட்டு வருந்துவனே
சீறு பகைவர் புரம் வேவச்
சிரித்தாய் தரித்தாய் சூலம்மழு
மாறு வளமில் இடைமருத
வாணா அடியேற்கு இரங்காயே. 4

கூற்றம் சிதைய இறைநீண்ட
கோகனகத்தாளாய் அமரர்
ஏற்றம் சிதைய எழுந்த விடத்து
ஏற்றஞ் சிதைய எடுத்தயின்றாய்
தோற்றம் சிதையப் பல்லுயிரும்
தொழுது போற்றித் துதிக்கும் உயர்
மாற்றம் சிதையா இடைமருத
வாணா அடியேற்கு இரங்காயே 5

ஆயா நினையே சரணடைந்தார்க்கு
அன்றி அவ்வா றடையார்க்கும்
ஏயா தோநின் அருள்பெருவாான்
இழிந்த களர்க்கும் பொழி தருமே

தாயாய் அளிசெய் தலைவனமுந்
தலைவேல் பரித்தாய் எஞ்ஞான்றும்
மாயா வளங்கூர் இடைமருத
வாணா அடியேற்கு இரங்காயே. 6

உணங்கல் மீனுக்கு உயிருதவி
உயர்நின் உலகம் புகப்புரிந்தாய்
சுணங்கன் நரியா தியர்க்கரிய
தூமுத் தியிற்சார் தரல்குறித்தாய்
அணங்கல் லவர்க்கும் உறல் கருதா
அண்ணா அமுதே அருட் கடலே
வணங்கல் புரிவேன் இடைமருத
வாணா அடியேற்கு இரங்காயே. 7

அந்தோ நினக்கு வரகுணனில்
அன்பு புரிவார் ஒருவரிலர்
முந்தோ தனையற் கருள்வதலான்
முயலும் பிறருக் கருளாயோ
நந்தோ வருநீ ரெறும்பனையும்
நண்ணு நறுவா சனைப்பொதியில்
வந்தோ வரிய இடைமருத
வாணா அடியேற்கு இரங்காயே. 8

அண்டர் பரவும் நிராமயன்நீ
அதனால் தரணி யெனுநாமம்
கொண்ட துனைக்குத் தகுமெனலுட்
குறித்தே நின்னைச் சரணடைந்தேன்

தொண்டர் துயரம் சகியாத்
தூயா நேயா தாயானாய்
வண்டர் மலர்க்கா இடைமருத
வாணா அடியேற்கு இரங்காயே. 9

ஆழி புடைசூழ் உலகில்நினை
யன்றித் தெய்வம் பிறிதுளதோ
யாழி யமைநின் அருட்கசுலாப்
படரு முளதோ பனிவரைவாய்
வீழி புரையும் பெருநலமா
முலையாள் மேய இடப்பாகா
வாழி வளஞ்சால் இடைமருத
வாணா அடியேற்கு இரங்காயே. 10

— திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

## பட்டினத்து அடிகளார் துதி

விளம்புகார் எனும்மிடற்று மருதுஇறைவன்
திருவருளின் மெய்ம்மை நோக்கிக்
களம்புகார் வில்மதன்தன் படைமகளிர்
புவிஆசை கருதும் காதல்
உளம்புகார் ஆகிவெறுத்து அணைந்து ஒருமும்
மணிக்கோவை உகந்து நல்கும்
வளம்புகார்ப் பட்டினத்துப் பிள்ளைஎனும்
பெரியவர்தாள் மனத்துள் வைப்பாம்.

— மருதவனப்புராணம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# கோட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்

இயற்றிய

# மருதவனப் புராணம்

●●●●●●●●●●●

## ஆண்டவிநாயகர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

உலகமுணர்ந் திடுகருணை யதனொடுநெஞ்
சகமதில்நீ டுவகை யெய்தி
அலகில்புக ழுறுகவிகை நிழலதின்மெய்
யன்பர்குல மதனைக் காக்கக்
குலவுமுப திடதவரி யணைமீது
பரசெழிற்செங் கோல்கைக் கொண்டாங்கு
கிலகுமிடை மருதாண்ட விநாயகனை
எப்பொழுது மிறைஞ்சி வாழ்வாம். 1

## மகாலிங்கேசர்

பூமேவு திசைமுகன்மால் எனுமவரும்
போற்றரிதாய்ப் பொருவி லாதாய்
நாமேவு செழுமறையின் உட்பொருளாய்
அகண்டிதமாய் நளின மென்னும்
மாமேவு மலர்வாவிக் கயல்வாவிக்
களியுதிர்க்கும் வளத்தின் நீடு
தேமேவு பொழில்புடைசூழ் இடைமருதின்
வளரொளியைச் சிந்தை செய்வாம்.

## ஏகநாயகர்

தேறுபுகழ் இடைமருதில் உறைஏக
நாயகன்றன் செய்ய தாளும்
ஊறுமது மலர்க்கூந்தற் பசியமயி
லுறையிடமும் ஓங்கு கங்கை
ஆறிலகு சடைமுடியும் ஐம்முகமும்
நாற்றோளும் அணிமுக் கண்ணும்
கூறுதிறல் இருமானும் ஒருமழுவும்
அனவரதங் குறித்து வாழ்வாம். 3

## மருதவாணர்

ஒருதவள மால்விடைமேல் புகலவுறும்
ஒருசிநட்டி யுதயந் தன்னில்
பொருதனிவான் சிலைநுதல்வேற் றடங்கணுமை
அணங்கினொடு புவனமுய்யக்
கருதிமையோர் கணம்புடைசூழ் கயிலையினின்
றணைந்தனைய கயிலை யென்னும்
மருதநிழ லிடத்துறையு மருதவாணக்
கடவுள் மலர்த்தாள் போற்றி. 4

## பெருநலமாமுலையம்மை

பொன்னிலகு பனிவரைக்கண் முளைத்தருள்வண்
தளிர்குழைத்துப் பொற்பி னோங்கிப்
பன்னுமிள மதிச்சடிலப் பவளமலை
யிடத்தினிது படர்ந்து மேன்மை
என்னுமுகை முகிழ்த்துவகை பூத்துமணந்
திடைமருதில் இமையோர் போற்ற
மன்னுபுகழ் பெருநலமா முலையெனச்சொல்
பசுங்கொடியை வணங்கு வாமால். 5

# கல்வெட்டுக்கள்

எண் 124.

ஸ்வஸ்தி ஸ்ரீ சோரப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு
ச-ஆவது நாள் நாஉ௰ரு-ஞல் திருவிடைமருதில்
தேவர் நாடகசாலையில் இத்தேவர் ஸ்ரீ கார்யம்
திருத்தக் கடவ திரைமூர் ஸபையாரும். திருவிடை
மருதில் நகரத்தாரும், திருக்கோயிலுடையார்களும்
தேவர் கணக்கு மருதன் பிரமகுட்டனும் ஸ்ரீ கார்ய
மாராய்கின்ற பூசலான்குடையாரும் இருந்து தேவற்கு
வைய்த்த பொலியூட்டிஞல் வைத்த விளக்கு ஆராய்ந்த
இடத்து இத்த ஸ்ரீ கோயில் கற்றளி எடுப்பதற்கு முன்
பொலியூட்டுக்குப் பிரமாணமாய் உள்ள கற்கள்
எல்லாம் அடிமனை கீழே இட்டி கல்லின்படி
எடுத்துக்கொண்டு இட்டமையில் முன்படி எடுத்த
படி மாற்றின பரிசே திருக்கற்றளிமேல் கன்மேல்
வெட்டிக்கொள்க வென்று ஏவக்கன் மேல்
வெட்டின படி காடுபட்டிகள் நந்திப் போத்தரையர்
குமாரமார்த்தண்டன் என்னும் விளக்கினுக்கு வைச்ச
பொன் கூ௰ இப்பொன் அறுபதின் கழைஞ்சும்
கொண்ட திரைமூர் ஸபையார் அட்டக் கடவதான
நெய் உரியிஞல் விளக்கு க. உம.

## குறிப்பு :

காடுபட்டிகள் = பல்லவர்கட்குரிய பட்டப்பெயர்.
அட்டக்கடவது = கொடுத்து உதவுவது

இக்கோயில் இரண்டாவது முறை திருப்பணி
செய்யபபட்டது என்பதை இக் கல்வெட்டுக் குறிப்

பிடுகிறது. இக்கோயிலில் குமார மார்த்தாண்டத் என்னும் பெயரினை உடைய திருவிளக்கு நெய்யினால் எரிப்பதற்கு 60 கழைஞ்சு பொன் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது. கற்றளி யெடுப்பதற்கு முன் கல் வெட்டுக்களை படியெடுத்துக்கொண்டு பின் அந்த இடத்திலேயே அவைகளை வெட்டுதல் அக்காலமரபு அக்குறிப்பினை வலியுறுத்துவதே இக்கல்வெட்டாகும். இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் நாடக சாலை நாடகம் நடப்பதோடு கோயில் அலுவல்களைக் கவனிக்கும் ஆணையாளர்கள் கூடுமிடமாகவும் விளங்கிக் கொண்டிருந்தது என்பது அறியற்பாற்று.

எண் 138.

ஸ்வஸ்தி ஸ்ரீ கலியுக வருஷம் நாலாயிரத்து எண்பத்து மூன்று உத்தம சோழராகிய கோப்பர கேசரி வன்மர்க்குயாண்டு யிரு • வது வடகரை நல்லாற்றூர் நாட்டு பிரும்ம தேயம் கஞ்சனூராகிய சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்து பெருங்குறிப்

**குறிப்பு :**

சதுர் வேதிமங்கலம் என்றால் இரண்டு மூன்று ஊர் களைத் தன்னகத்தே அடக்கிய ஒருபகுதி.

நான்கு வேதங்களிலும் வல்லவர்கள் நிறைந் திருக்கும் இடத்தினைச் சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பிடுவதும் உண்டு.

எண் 202.

ஸ்வஸ்தி ஸ்ரீ பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு –ஆவது திரு

விடைமருதில் ஸ்ரீ மூலஸ்தானத்தில் பெருமானடிகளுக்கு ஆரியக் கூத்தாட ஸ்ரீ கார்யம் ஆராய்கின்ற அதிகாரிகள் சிற்றிங்கண் உடையான் கோயில் மயிலையான பராந்தக மூவேந்த வேளாரும் திரைமூர் ஸபையாரும் திருவிடைமருதில் நகரத்தாரும் தேவகந்மிகளும் நாடக சாலையிலேயிருந்து கித்தி மறைக்காடன் ஆன திருவெள்ளை அறை சாக்கைக்கு நிவந்தம் செய்து குடுக்க என்று ஏவலால் இத்தேவர் தேவதானம் விளங்குடி நிலத்தில் பநெச்சரி பத்து உள்பட நிலம் வேலியும் இவ்வாண்டின் எதிராமாண்டு முதல் இவ் நிலங்கொண்டு தைப்பூசத் திருநாளில் ஒரு கூத்தாடுவதாகவும் திருத்தும் ஆடின பிற்றை நாள் துடங்கி மூன்று கூத்தாடுவதாகவும் வைய்காசி திருவாதிரையின் பிற்றை நாள் துடங்கி மூன்று கூத்தாடுவதாகும். ஆக இந்தக் கூத்து ஏழும் இங்கு ஆடுவதாகவும் பண்டாரத்தே பதினுற்கல நெல் கொற்று பெறுவதாகவும். இந்நெல் அழிவில் அடைப்படி நெல்லும் கொற்றும் இரட்டி அவ்வாண்டையின்.

## குறிப்பு :

நிவந்தம்—செலவு செய்து கொள்ளக் கொடுக்கும் நிலம். இக் கல் வெட்டால் இக்கோயிலில் நாடக சாலை இருந்த தென்பதும் அச்சாலையில் கித்தி மறைக்காடன் சாக்கைக் கூத்து ஆடியதாகவும். அக்கூத்து தைப்பூசப் பெருவிழாவில் நான்கும், வைகாசி விழாவில் மூன்றும் நடைபெற்று வந்ததாகவும் அறியக் கிடக்கின்றது. தொற்று = செலவுக்குப் பெற்றுக் கொள்வது.

எண்; 202,

ஸ்வஸ்தி ஸ்ரீ பாண்டியனைத் தலைகொண்ட கோப்பர கேசரி பன்மர்க்கு யாண்டு ச-ஆவது நாள் ௱எ௰ - ஞல் திருவிடைமருதில் ஆள்வார் கோயில் முன்பில் கூடத்தே திருவிடைமருதில் ஆள்வார் ஸ்ரீ கார்யம் ஆராய்கின்ற அதிகாரிகள் சிற்றிங்கண் உடையான் கோயில் மயிலைஆன பராந்தக மூவேந் தேவளான் திருவிடைமருதில ஆள்வார் தேவதானம் திரைமூர் தேவதான பிருஹ்மதேயமும் ஸாத நப்படி கேட்டு ஸாதனத்தில் திரைமூர் தேவதானம் குடி ஞீக்கி கிடந்தமையில்லும் திரைமூர் தேவதான ஸ்வதேயம் ஸாதநப்படி பஞ்சவாரம் இருநூற்று அம்பத்து அறு கல நெல் அட்டக் கடவார்கள். படிமாற்றுகேட்டு படி மாற்றில் நூற்று அறுபதின் கலமே அட்டவரு கின்றமை யாலும் திரைமூர் தேவதானம் இருபதிற்று வேலியும் குடி ஞீக்கிச்சில்லை என்று எண்ணூற்றுக் கலமே அட்டிவாரார் நின்றமையால் திரைமூர் தேவ தானம்செய்தபடி ஸார்த நம் கொடுவருக என்று ஸாத நம் கேட்டு இந்த ஸாதநத்தில் குடிஞீக்கிக் கிடந் தமையில் இன்னிலம் இருபதிற்று வேலியும் இவற்கே யாண்டு மூ-ங ஆவது ஓலைப்படி திருவிடைமருதன் என்னும் மரக்காலால் இரண்டாயிரத் தெண்ணூற் றுக் கலத்துக்கும் அடைஓலைப்படி ஆ . .. த்தும் இத் தேவர் தேவதான பிருஹ்மதேயம் திரைமூர் ஸபை யார் முன்பு நூற்று அறுபதிங் கலமே அட்டி வரு கின்றமையால்......ஸாத நம் கேட்டு இந்த ஸாதநத்தில் பஞ்சவாரம் இருநூற்று அம்பத்தறு கல நெல் அட்டக் கடவர் களாதமையிலும் இப்பரிசு முதலாக்கி இத் தேவருடைய முன்பில் படிமாற்று கேட்டு ஏற நிவந்தஞ் செய்து......ன்று ஸ்ரீ கார்யம் ஆராய்கின்ற

அதிகாரிகள் சிற்றிங்கண் உடையான் கொயில் மயிலை ஆன பராந்தக மூவேந்த வேளான் ஏவ திரைமூர்...... திருவிடைமருதில் நகரத்தாரும் இருந்து நிசதப்படி படி மாற்று நிவந்தம் செய்தபடி ஆள்வார்க்கு செந் நெல் குத்தல் அரிசிய் சிறுகாலைக்கு திருவமுதரிசி பன்இரு நாழியும் உச்சம் பொழுதைக்கு திருவமுதரிசி பதின் அஞ்ஞாழியும் உச்சம் பொழுதைக்கு பலி அ......யும் இராவைக்கு திருவமுதரிசி பன்னிரு நாழியும் இராவைக்கு பலியரிசியும் அர்த்த யாமத்துக்கு திருவமுதரிசி எண்ணாழியும் பிள்ளையார் கணவதி யார்க்கு சிறு காலைக்கு திரு அமுதரிசி இரு நாழியும் ஆக......அமுதரிசி அம்பத்து முன் நாழியும் அரிசி தூணிப்பதக்கு அஞ்ஞாழியும் தூப் பருப்பு நிசதி நாநாழி உரியும் பிள்ளையார்க்கு பருப்பு உரியும் பலகாயம் நிசதி மிளகு ஆழாக்கும் கடுகு உழக்கும் கறி அமுதுக்கு காய்கறி அமுது ஒன்றும் புளிங்கறி அமுது ஒன்றும் பொறிக்கறி அமுது ஒன்றும் நிசதி சர்க்கரை அமுது நாற்பலவரையும் வாழைப்பழம் நிசதம் இருபதும் நெய் அமுது நிசதி நாழி உரியும் தயிரமுது நிசதி எண்ணாழியும் அடைக் காய் அமுது நிசதி எண்பதும் வெற்றிலை அமுது தெரிமுன்று பற்றும் னூற்றமுதும் உப்பமுதும் இப் பரிசு நிவந்தம் ஆக்கி இதுஸாதித்தவல் இது பத்மா கேஸ்வர ரட்சை,

குறிப்பு :

பஞ்சவாரம் = ஐந்தி லொருவாரம்

நிசதம் = நாள்

திருவிடைருதன் = கோயில் மரக்கால்

ஸ்ரீ கார்யம் = கோயிற் கருமங்களைக் கவனிப்போர்.

இக்கல் வெட்டால் கோயிலில் நாள்தோறும் நடக்கும் நடைமுறை பூசையும். அதற்கு உள்ள படித்தரங்களும் இன்னின்னவை என்று விளக்கப் பட்டுள்ளன. இன்றும் இக்கோயிலில் நடக்கும் குளித்தளிகை நிவேதனம் அப்பொழுதே இக்கல் வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. தஞ்சை இராசரா சேச்சுரத்தில் "ஆடவல்லான்" என்னும் பெயரோடு தனிமரக்கால் இருந்ததுபோல இக்கோயிலிலும் 'திருவிடைமருதன்' என்னும் தனி மரக்கால் இருந்த தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக்கல் வெட்டால் அக்கால அளவை முறைகளையும், கணக்கின் சிறப்பையும் ஒருவாறு உணரலாம்.

இக்கல் வெட்டுக்கள் நான்கும் 1899 ஆம் ஆண்டு தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி புத்தகம் 3, பகுதி, 2, 3, இவைகளில் இருந்து எடுக்கப் பட்டதாகும்.

இவைகளேயன்றி இத்தல சம்பந்தமாக இன்னும் 151 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகள் யாவும் அவ்விலாக்காவினரிடமிருந்து கிடைத்தவுடன் தனி நூலாக வெளியிடப்படும், அவைகள் யாவையும் வெளிவந்தால் இத்தல வரலாற்றுக் குறிப்புக்கள் முழுவதனையும் உணர்ந்துகொள்ள ஏதுவாகும்.

*திருச்சிற்றம்பலம்*

முற்றிற்று

உ

சிவமயம்

இடைமருதி சனைப்பணிதற் கொருவர் எண்ணுற்று
எழுந்திடில்அங்கு அவர்வினையும் எழுந்து நிற்கும்,
நடையுறில்அவ் வூர்நோக்கிப் புறவூர் நோக்கி
நடக்கும் அது சொல்லாமல், அவர்கள் ஏகத்
திடமிலராய் உடன்ஒருகால் திரும்பினாலும்
திரும்பாது, சென்றவினை சென்றதேயாம்,
புடவிபுகழ் காசியின்உற்று இலகு கங்கைப்
புனல் படிந்து வருபலன்மற் றவருக்கு எய்தும்.

— மருதவனப் புராணம்